# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

சகோ. காலேப் யோசுவா
**Tele :** 04630 - 256157

"ஓரேப்"
திருவைகுண்டம் - 628 601.
தூத்துக்குடி மாவட்டம்.

## கர்த்தருடைய இராப்போஜனம்

1. தேவனுடைய சித்தத்தினாலே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காக கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான்; தேவனுடைய சபைக்கும், எனக்கும், உங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது;

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக.

2. பிரியமானவர்களே, புதிய ஏற்பாட்டின் பிரதான நான்கு சுவிசேஷகர்களாகிய மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் தேவஆவியினால் அருளப்பட்டு எழுதிய தங்களது தேவனுடைய சுவிசேஷத்தில் **கர்த்தருடைய பஸ்கா, கர்த்தருடைய இராப்போஜனம் மற்றும் கால்களைக் கழுவுதல்** போன்ற நியமங்களைக் (Ordinances) குறித்து எழுதியுள்ளார்கள். அப்போஸ்தலருடைய நடபடிகளில் நாம் பெற்றுக்கொள்ள வேண்டிய தண்ணீர் ஞானஸ்நானம் குறித்து எழுதப்பட்டுள்ளது.

3. சுவிசேஷகர்கள், கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் கர்த்தருடைய பஸ்கா குறித்து மத்.26:19-25, மாற்.14:16-21, லூக்.22:13-18 வசனங்களில் எழுதுகிறார்கள். குமாரனுடைய சுவிசேஷத்தில் கர்த்தருடைய இராப்போஜனம் குறித்து மத்.26:26-29, மாற்.14:22-25, லூக்.22:19-20 வசனங்களில் எழுதுகிறார்கள். யோவான் மட்டும் கால்களைக் கழுவுதல் குறித்து தேவனுடைய சுவிசேஷத்தில் யோ.13:2-17 வசனங்களில் எழுதுகிறான். அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:38ல் மனந்திரும்புதல், பாவமன்னிப்பு, தண்ணீர் ஞானஸ்நானம் குறித்துக் காணப்படுகிறது.

4. கர்த்தர் மூன்று தெய்வீக நியமங்களை ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நாம் சரீரப்பிரகாரமாக ஆசரிக்க கட்டளையிட்டுள்ளார். அவையாவன:

அ. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தில் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம். மத்.28:19, அப்.2:38.
ஆ. கர்த்தருடைய இராப்போஜனம் யோ.6:48-58, 1கொரி.11:19-34.
இ. கால்களைக் கழுவுதல் யோ.13:2-17.

5. இந்த செய்தித்தொகுப்பில் **கர்த்தருடைய இராப்போஜனம்** குறித்து மட்டும் எழுதுகிறேன். ஏனென்றால் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம், கால்களைக் கழுவுதல் குறித்து ஏற்கனவே எழுதியுள்ளேன். அந்தச் செய்தித்தொகுப்புகள் உங்களுக்கு தேவைப்பட்டால் எனக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நமக்கு கர்த்தருடைய பஸ்காவை ஆசரிக்க கட்டளையில்லை. ஆனால் கர்த்தருடைய பஸ்காவுக்கும், இராப்போஜனத்துக்கும் சம்பந்தம் உண்டு. ஆதலால் இங்கு கர்த்தருடைய பஸ்கா குறித்தும் சற்று தியானிப்பது நமக்கு நலமாயிருக்கும்.

6. இயேசு மாம்சத்தின்படி இஸ்ரவேல் புத்திரரில் ஒருவராகப் பிறந்து ரோ.9:5, நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டவராயிருந்தபடியால் பஸ்காவை ஆசரித்தார். மத்.26:19,20, மாற்.14:12, லூக்.22:7. யோர்தான் நதியில் தண்ணீரில் மூழ்கி யோவான் ஸ்நானனால் ஞானஸ்நானம் பெற்று எல்லா நீதியையும் நிறைவேற்றினார். மத்.3:15,16, மாற்.1:9-11, லூக்.3:21,22, யோ.1:31-34. பஸ்கா ஆசரிப்பின் முடிவில் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆரம்பித்து, அதில் பங்குகொண்டார். மத்.26:26. கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொண்டிருந்த வேளையில் போஜனத்தை விட்டெழுந்து வஸ்திரங்களைக் கழற்றி வைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து சீஷர்களுடைய கால்களைக் கழுவித் துடைத்தார். யோ.13:4,5. இவ்வாறாக ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நாம் சரீரப்பிரகாரமாக ஆசரிக்க மூன்று தெய்வீக நியமங்களை நமக்கு கட்டளையிட்டதோடு மட்டுமல்லாது நமக்கு முன்மாதிரியாகத் தானும் அந்த மூன்று நியமங்களையும் ஆசரித்தார்.

7. **மூன்று பரிபூரணத்துக்கு எடுத்துக்காட்டு**. நியமங்கள் (Ordinances) என்பது அதிகாரத்தில் உள்ள ஒருவரால், அவருடைய ஆளுகைக்குட்பட்டவர்கள் ஆசரிக்கும்படி கொடுக்கப்பட்ட கட்டளையாகும். ஆதலால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம், பரிசுத்தஆவியைப் பெற்று அதினால் வழி நடத்தப்படுகிறோம் என்பவர்கள் இந்த மூன்று நியமங்களையும் கண்டிப்பாக கடைப்பிடித்தாக வேண்டும். இதில் சாக்குப்போக்குக்கு இடமேயில்லை. அதோடுமட்டுமல்ல, இவைகளை அதனதன் முறைமைகளின் படியே ஆசரிக்க வேண்டும். இவைகளை ஆசரிக்கலாம், ஆசரிக்காமலும் இருக்கலாம்; இப்படியும் ஆசரிக்கலாம், அப்படியும் ஆசரிக்கலாம் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஒவ்வொன்றையும் அதனதன் ஒழுங்கின்படியேயும், கிரமங்களின்படியேயும் ஆசரிக்க வேண்டும்.

8. கர்த்தருடைய பஸ்கா குறித்து நாம் யாத்திராகமம் 12ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். பஸ்கா என்பதன் எபிரேயச்சொல் PESACH ஆகும். இதன் ஆங்கிலேயச்சொல் Pass Over ஆகும். இதற்கு **கடந்து போகுதல்** என்று பொருள். மாம்சத்துக்குரிய இஸ்ரவேலர் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின்கீழ் அழிவில்

இருந்து தப்பினர். யாத்.12:13. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைந்த நாளில் கர்த்தருடைய பஸ்காவை ஆசரித்தார்கள். யாத்.12:11,12. பின்பு இந்த விடுதலை நாளை நினைவுகூர்ந்து, அந்த நாளை கர்த்தருக்குப் பண்டிகையாக, நித்திய நியமமாக ஆசரிக்கக் கட்டளைப் பெற்றனர். யாத்.12:14.

9. இங்கு நான் இஸ்ரவேலருடைய 12 மாதங்களையும் அதற்கு ஆதாரமாக எடுத்த வேத வசனங்களையும், இணையான ஆங்கில மாதங்களையும் எழுதுவது உங்களுக்கு பிரயோஜனமாயிருக்குமென நினைக்கிறேன்.

| யூத மாதங்கள் | | வேதவசனங்கள் | ஆங்கில மாதங்கள் |
|---|---|---|---|
| 1. ஆபீப் | ABIB | யாத்.12:2,13:4 | |
| அல்லது நிசான் | NISAN | எஸ்.3:7 | ஏப்ரல் |
| 2. சீவ் | ZIV | 1இரா.6:1 | மே |
| 3. சீவான் | SIVAN | எஸ்.8:9 | ஜுன் |
| 4. தம்மூசு | TAMMUZ | எசே.8:14, சகரி.8:9 | ஜுலை |
| 5. ஆப் | AB | எஸ்.7:9 | ஆகஸ்ட் |
| 6. எலூல் | ELUL | நெகே.6:15 | செப்டம்பர் |
| 7. எத்தானீம் | ETHANIM | 1இரா.8:2 | அக்டோபர் |
| 8. பூல் | BUL | 1இரா.6:38 | நவம்பர் |
| 9. கிஸ்லே | KISLEV | சகரி.7:1 நெகே.1:1 | டிசம்பர் |
| 10. தேபேத் | TEBHETH | எஸ்.2:16 | ஜனவரி |
| 11. சேபாத் | SHEPAT | சகரி.1:7 | பிப்ரவரி |
| 12. ஆதார் | ADAR | எஸ்.3:7,9:27 | மார்ச் |

இதில் முதல் மூன்று மாதங்கள் அறுவடைக்காலம் (Harvest season); அடுத்து மூன்று மாதங்கள் கோடைகாலம் (Hot season); ஏழு மற்றும் எட்டாவது மாதங்கள் விதைவிதைப்புக் காலம் (Seed time); ஒன்பது, பத்து மற்றம் பதினொன்றாவது மாதங்கள் முன்பனிக்காலம் (Winter season); பன்னிரெண்டாவது மாதம் குளிர்காலம் (Cold season).

10. கர்த்தருடைய பஸ்காவை ஆசரிக்க தெரிந்தெடுக்கப்பட்ட ஆட்டுக்குட்டி ஆண், பழுதற்றது. யாத்.12:5. இந்த ஆட்டுக்குட்டி மாலையில் அடிக்கப்பட்டது. யாத்.12:6. ஆட்டுக்குட்டியின் ஒரு எலும்பு கூட முறிக்கப்படவில்லை. யாத்.12:46, எண்.9:12. **ஆட்டுக்குட்டியின் இரத்தம் அடையாளம்.** யாத்.12:13. கர்த்தருடைய பஸ்காவை புசிக்கும் வீட்டுவாசல் நிலையின் மேற்சட்டத்திலும், நிலைக்கால்கள் இரண்டிலும் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்படவேண்டும். யாத்.12:7. **இரத்தம் ஜீவனுக்கு சமானம்.** லேவி.17:14. தெளிக்கப்பட்ட இரத்தத்தைப்பார்த்து கர்த்தர் சங்காரக்காரனை அந்த வீட்டில் உள்ளவர்களை அதம்பண்ணாதபடிக்கு வரவொட்டாமல் வாசற்படியை விலகிக் கடந்துபோவார். யாத்.12:23.

11. பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை நெருப்பில் சுட்டு, புளிப்பில்லாத அப்பத்தோடு புசித்தார்கள். யாத்.12:8. பஸ்கா ஆட்டுக்குட்டி இரவில் புசிக்கப்பட்டது. யாத்.12:8. பின்பு இது நினைவுகூறுதலின் நாளாக வருடத்தின் முதலாம் மாதம் (ஆபீப் அல்லது நிசான்) 14ம் தேதி சாயங்காலம் முதல் 21ம் தேதி சாயங்காலம் வரை ஏழு நாட்கள் புளிப்பில்லா அப்பம் புசித்து, புளிப்பில்லா அப்பப்பண்டியையாக ஆசரித்தார்கள். இந்த ஏழு நாட்களிலும் வீட்டில் புளித்தமா காணப்படலாகாது. யாத்.12:15-20.

12. ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கு கிறிஸ்து பஸ்கா ஆட்டுக்குட்டி 1கொரி.5:7. இயேசு உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி யோ.1:29, 1யோ.2:2. இவர் பாவம் இல்லாதவர் யோ.8:46, 1யோ.3:5. கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் ஆறாம் மணி முதல் ஒன்பதாம் மணி வரை, நம்முடைய காலக்கணக்கின்படி மதியம் 12 மணி முதல் மாலை 3 மணி வரை பாடுபட்டு மரித்தார். மத்.29:45. இயேசு கிறிஸ்துவின் எலும்புகள் முறிக்கப்படவில்லை. யோ.19:33, சங்.34:20. ஆனால் இரத்தம் சிந்தினார் யோ.19:34. **ஆட்டுக்குட்டியின், கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிற்று.** எபே.1:7. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது. 1யோ.1:7. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டதால் நமக்கு பாவமன்னிப்பு உண்டாயிற்று. எபி.9:22. இதனால் நாம் தேவனுக்கு முன்பாக இராஜாக்களும், ஆசாரியர்களும் ஆக்கப்பட்டோம். வெளி.1:6,5:9. இவ்வாறாக **கிறிஸ்து நமது பாவங்களுக்காகப் பாடுபட்டு மரித்ததை நினைவுகூற (மரித்த நாளை நினைவு கூற அல்ல, ஆதலால் மரித்த நாள் என்று ஒரு நாளை நியமித்துக்கொண்டு அந்த நாளை நினைவுகூறக்கூடாது)** அவருடைய இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்கள், கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிக்கிறார்கள். 1கொரி.14:24-26.

13. சில இடங்களில் ஆவிக்குரிய இஸ்ரவேல் சபையாரும் பஸ்காவை ஆசரிக்க வேண்டும் என்ற உபதேசம் உண்டு. இவர்கள் அதற்கு ஆதாரமாக 1கொரி.5:6-8 வசனங்களை சுட்டிக்காட்டுகிறார்கள். கி.பி.300 வரை கிறிஸ்தவர்கள் பஸ்காவை பிரதி ஆண்டு ஆபீப்/நிசான் மாதம் 14ம் நாள் கொண்டாடினார்கள். நிசாயா கவுன்சிலில் கி.பி.325க்கு பின் இதை கொண்டாடுகிறவர்கள் மாறுபட்ட கருத்துள்ளவர்கள் (Heretics) என அழைக்கப்பட்டனர். இந்த பஸ்கா பண்டிகையை கிறிஸ்துவின் உயிர்தெழுந்த நாள் (Easter) என்ற பெயரில் கொண்டாடினார்கள். இது சூரியன் பூமத்தியரேகையைத் தாண்டும் நாள், அதாவது இரவும் பகலும் சமநேரமுடைய காலம் (Equinox) மார்ச் மாதம் 21ம் தேதி என கணக்கிடப்பட்டு, இந்த நாளுக்கு பின் வருகிற முதல் பௌர்ணமியை அடுத்துவரும் முதலாம் ஞாயிறு அன்று கொண்டாடப்படுகிறது.

14. கர்த்தருடைய பஸ்காவை மாம்சத்துக்குரிய இஸ்ரவேலர் புசித்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்துக்கு வனாந்திர பிரயாணத்தைத் தொடங்கினார்கள். ஆவிக்குரிய இஸ்ரவேலர் கர்த்தருடைய இராப்போஜனத்தைப் புசித்து கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாக தங்கள் வனாந்திர வாழ்க்கையை தொடங்குகிறார்கள். இவர்கள் இந்த பூமியில் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிறார்கள். இவர்களுடைய குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது. பிலி.3:20. தேவனால் கட்டப்பட்ட கைவேலையில்லாத நித்திய வீடு இவர்களுக்கு பரலோகத்தில் உண்டு. 2கொரி.5:1.

15. யுத்தத்தில் வெற்றிபெற்று திரும்பிய ஆபிரகாமை உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு சந்தித்து, கர்த்தருடைய இராப்போஜனத்தை அவனுக்குக் கொடுத்து அவனை ஆசிர்வதித்தான். ஆபிரகாம் அவனுக்கு தசமபாகம் கொடுத்தான். ஆதி.14:14-20. நாமோ பாவத்தோடு யுத்தத்தை முடித்து, மறுபாகத்தை அடைந்தவுடன் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குபெறுகிறோம். After the war of sin is over, the first thing we do when we strike the other side is take the communion, the Lord's Supper. ஒருவன் மனந்திரும்பி தன் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்ற பின்புதான் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ள வேண்டும். நாம் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றதினால் இயேசுவோடு கூட மரித்து, அவரோடு கூட அடக்கம் பண்ணப்பட்டு, அவரோடு கூட உயிர்த்தெழுந்த நாள் முதல் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குபெறத் தொடங்கி அவருடைய வருகை வரை தொடர்ந்து அதில் பங்குபெற வேண்டும். அதோடு மட்டுமல்ல கிறிஸ்துவுக்குள்ளான புது சிருஷ்டிகள் யாவரும் ஆபிரகாம் போன்று தங்கள் வருமானங்கள் அனைத்திலும் கர்த்தருக்குரிய தசமபாகத்தை கொடுக்க வேண்டும். ஏனென்றால் கிறிஸ்துவினுடையவர்கள் யாவரும் ஆபிரகாமின் சந்ததி. கலா.3:29. நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்கள். யோ.8:39.

16. கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து, தேவனுடைய வலது பாரிசத்திலிருந்து நமக்காக வேண்டுதல் செய்து கொண்டு இருக்கிறார் என்று விசுவாசிக்கிறோம்; அதன்படி நாங்களும் கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றதன் மூலம் கிறிஸ்துவோடு கூட மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, கிறிஸ்துவினுடைய உயிர்தெழுதலின் சாயலில் இணைக்கப் பட்டிருக்கிறோம், கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசிர்வாதத்தினாலும் ஆசிர்வதிக்கப்பட்டிருக்கிறோம் எனக் கூறிக்கொண்டு, தெய்வீக நியமங்களை கைக்கொள்வதிலும், ஆசரிப்பதிலும், கர்த்தருக்குரிய தசமபாகத்தைச் செலுத்துவதிலும் நம்மில் ஒவ்வொருவரும் அவரவர் மனம்போன போக்கில் நடந்துகொள்வோமானால் நாம் நமது கிரியைகளின் மூலம் கிறிஸ்துவுக்கு அவமானத்தைக் கொண்டுவருகிறவர்களாயிருப்போம்.

17. அந்தப்படியே நாங்கள் லவோதிக்கேயா சபைக்கு அதன் தூதன் மூலமாக கர்த்தர் சபைக்குக் கொடுத்தச் செய்தியில் உறுதியாக நிலைத்திருக்கிறோம் எனக் கூறிக்கொண்டு, செய்திக்குப் புறம்பாக, ஏற்றுக்கொண்ட விசுவாசத்துக்குப் மாறாக நம்முடைய கிரியைகள் காணப்படுமாயின் நாமும் கிறிஸ்துவுக்கு அவமானத்தைக் கொண்டுவருகிறவர்களாகவே இருப்போம். செய்தியில் இருக்கிறோம் எனக் கூறும் சபைகள் கள்ளப்போதகர்களால் நிறைந்திருப்பதால், சபையில் செய்தி முற்றிலுமாக நடைமுறையில் அதாவது கிரியைகளில் காணப்படுவது இல்லை.

18. இந்நாட்களில் இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் என்பவர்கள் மத்தியில் கர்த்தருடைய இராப்போஜனம் மற்றும் கால்களைக் கழுவுதல் நியமங்களை ஆசரிப்பதில் ஒழுங்கு இல்லாமல் பற்பல முறைமைகள் அவரவர்கள் மனம்போனபோக்கில் கையாளப்பட்டு எங்கும் ஒழுங்கின்மை காணப்படுகிறதால், செய்தி தூஷிக்கப்பட்டு வருகிறது. ஆதலால் கர்த்தருடைய இராப்போஜனம் ஒழுங்குமுறைமைகளை உங்களுக்கு எழுதி உணர்த்துவது சுவிசேஷகனாகிய எனக்கு மிக்க அவசியமாகக் கண்டது. ஏனென்றால் செய்தியில் இருக்கிறோம் என்று கூறிக்கொண்டே, கோதுமைக்குள் களைகளை விதைக்கிற ஒளியின் தூதனுடைய வேஷத்தைத்தரித்த கபடமுள்ள கூலிவேலையாட்கள் அநேகர் நம் மத்தியில் உண்டு என்பதை ஆவிக்குரியவர்கள் அறிவார்கள்.

19. நமது மத்தியில் ஆயிரக்கணக்கான ஸ்தாபனசபைகள் உண்டு. இவைகள் யாவும் அந்திக்கிறிஸ்துவின் ஆவியினால் வழிநடத்தப்படும் பேர்கிறிஸ்தவ ஸ்தாபனசபைகளாகும். இவைகள் பொய்யாய் தேவனுடைய சபை என்று பெயர்பெற்றிருக்கிறது. இவர்களது முறைமைகள் கொரிந்து சபையில் பவுலினால் நடத்தப்பட்ட கர்த்தருடைய இராப்போஜ ஆராதணைப்போன்றது அல்ல. **இவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை பரிசுத்த ஐக்கிய விருந்து, பரிசுத்த நற்கருணை, மாஸ், திருவிருந்து என பற்பல பெயர்களில் அழைக்கிறார்கள்.** மேலும் கர்த்தருடைய இராப்போஜனத்தின் முக்கியத்துவம் என்ன? யார், எதற்காக புசிக்கவேண்டும்? என்ற அறிவு எதுவுமில்லாமல் அவரவர்கள் தங்கள் தங்கள் மனம்போன போக்கில் ஆசரிக்கிறார்கள். மேலும் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிக்கக்கூடாது என்ற உபதேசமும் இவர்கள் மத்தியில் உண்டு. யோ.6:53ன்படி இவர்களுக்குள்ளே ஜீவன் இல்லை. நித்திய ஜீவனில் இவர்களுக்கு பங்கு இல்லை.

20. கர்த்தருடைய இராப்போஜனத்தைக் குறித்து இவர்களது நோக்கம் என்ன? ஒருவன் அடிக்கடி தன் நினைவினாலும், வார்த்தையினாலும், கிரியையினாலும் செய்கிற சகலவிதமான பாவங்களுக்கு உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, முழுமனதோடே துக்கப்பட்டு பாவஅறிக்கை செய்யும் போது அவனுடைய பாவங்கள் அவனுக்கு மன்னிக்கப்படுகிறது. கர்த்தருடைய இராப்போஜனம் ஆசரிக்கும் ஒவ்வொரு முறையும் ஒருவனுடைய அற்பபாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. ஆதலால் ஆசரிக்காத நாளே இருக்கக்கூடாது என்கிறார்கள். அந்த விசுவாசத்தின் அடிப்படையில் கர்த்தருடைய இராப்போஜனம் வேளையில் கிறிஸ்து தன் பாவங்களுக்காக மரித்தார் என்பதை நினைவுகூர்ந்து, தன் இருதயத்தில் நன்றி

அறிதலோடே அவரை (கிறிஸ்துவின் சரீரத்தை - அப்பத்தை) தனக்கு ஆகாரமாக உட்கொள்ளுகிறார்கள். மேலும் கிறிஸ்துவின் இரத்தம் அவனுக்காக சிந்தப்பட்டதை நினைவுகூர்ந்து, ரசத்தை (கிறிஸ்துவின் இரத்தத்தை) பானம் பண்ணி நன்றி செலுத்துகிறான். இவ்வாறாக ஒருவன் தேவனுக்கு நன்றி செலுத்துவதை கர்த்தருடைய இராப்போஜனமாகிய பரிசுத்த நற்கருணை என்கிறார்கள். தாங்கள் நினைத்த வேளைகளில் எல்லாம் இந்த பரிசுத்த நற்கருணையை ஆசரிக்கிறார்கள். இது தவறு.

21. 1954ம் ஆண்டு வெளியிடப்பட்ட தென்னிந்திய திருச்சபையின் **கர்த்தருடைய இராப்போஜனம் ஆகிய பரிசுத்த நற்கருணையின் ஒழுங்கு முறைமைகளை** படித்தேன். அதில் முறைமைகளின் இரண்டாவது பத்தியில் **மூலச்சட்டம் பத்தாம் அதிகாரம், 2ம் பிரிவில் கண்டுள்ள திட்டத்தின்படி இவ்வாராதணை முறைமை ஆக்கப்பட்டிருக்கிறது. எந்த தனி ஆராதணையின் முறைமையின்படிக்கும் இது செய்யப்படாமல் எல்லா பாரம்பரியங்களிலிருந்து எடுத்த பல கருத்துகளை தனக்குள் கொண்டிருக்கிறது** என எழுதியிருந்தது. இதை வாசித்தவுடன் என் சிந்தனை இவர்களைக் குறித்து சுவிசேஷகனாகிய மாற்கு கர்த்தர் சொன்னதாக 7வதுஅதி., 9வது வசனத்தில் **நீங்கள் உங்கள் பாரம்பரியங்களைக் கைக்கொள்ளும்படிக்கு தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்கியது நன்றாயிருக்கிறது** என எழுதியிருப்பதற்கு விரைந்து சென்றது. பொதுவாக இவர்கள் பாவஅறிக்கை செய்வதன் மூலம் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று நினைத்து அதற்கு நன்றி செலுத்த கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரித்து, அதை **நன்றி செலுத்துதல்/Thanks giving** என்றும் அழைக்கிறார்கள். இதன் எபிரேயச்சொல் யாதாஷ் YADAH ஆகும்.

22. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தைத் ஸ்தோத்தரி, என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. சங்.103:1,2. மேலும் **நீ புசித்து திருப்தியடைந்து இருக்கையில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த அந்த நல்ல தேசத்துக்காக அவரை ஸ்தோத்தரிக்கக்கடவாய்.** உபா.8:10-19. இவ்வசனங்களைக் கொண்டு யூதர்கள் தங்கள் ஆகாரத்தை உட்கொள்வதற்கு முன்பு நன்றி செலுத்துவார்கள். இந்த ஸ்தோத்திரத்தை அவர்கள் **பெறாகோத்**/BERAKOH என்பார்கள். இவ்வாறாக தங்கள் பாவமன்னிப்புக்கு கர்த்தருடைய இராப்போஜனம் ஒரு வகையான நன்றி கூறுதல் என்கிறார்கள்.

23. இதை கி.பி.115ல் இக்னேஷியஸ் என்பவர் **நன்றி திருவிருந்து/ க்யூக்காரிஸ்டியோ/ EUCHARISTIA** என்று அழைத்தார். பின்பு **சிரில்/Cyril** எருசலேமின் பிஷப் ஆனபோது இராப்போஜன வேளையில் ஜெபத்தினால் அப்பமும் திராட்சை ரசமும் புனிதமாக்கப்பட தேவத்துவத்திலுள்ள மூவரில் ஒருவரான பரிசுத்தஆவியானவர் அப்பத்தின் மேலும் திராட்சை ரசத்தின் மேலும் இறங்கி அதை உண்மையாகவே கிறிஸ்துவின் சரீரமாகவும் இரத்தமாகவும் மாற்றுகிறார் என்ற கள்ள உபதேசத்தை உட்புகுத்தினார்.

24. பிதா, சுதன், பரிசுத்தஆவியாகிய திரியேக தேவனை நாம் விசுவாசித்து, ஸ்தோத்தரித்து வணங்குகிறோம். படைத்தல், காத்தல், மீட்டல் கிரியைகளில் பிதா, சுதன், பரிசுத்தஆவி ஆகிய மூவருக்கும் பங்கு உண்டு. உலகம் சிருஷ்டிக்கப்பட்ட போது பிதா கட்டளையிடுகிறார், வார்த்தையானவர் புறப்பட்டார், பரிசுத்தஆவியானவர் அசைவாடிக்கொண்டிருந்தார். அது போல கர்த்தருடைய இராப்போஜனத்தை பிதா தந்தருளினார், சுதன் கட்டளையிட்டார், பரிசுத்தஆவியானவர் உயிர்பிக்கிறார். கர்த்தருடைய இராப்போஜனத்தில் அப்பம், திராட்சைரசம் மீது பரிசுத்தஆவியானவர் இறங்கி உயிர்ப்பிக்கிறார். அவ்வாறில்லாவிட்டால் அப்பமும் திராட்சைரசமும் வெறும் சிருஷ்டி பொருளாகவே இருக்கும், அது கிறிஸ்துவினுடைய சரீரமும், இரத்தமும் ஆகாது என லௌகீக ஞானத்தைக் கொண்டு கர்த்தருடைய இராப்போஜன ஆராதணையை மிகைப்படுத்தி அதை மாஸ் (Mass) என்று அழைத்து, அதன் மூலம் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுகிறது என்கிறாள் மகாவேசியாகிய கத்தோலிக்கத் திருச்சபை.

25. மேலும் இந்த ஆராதணையில் குருமார்கள் (இவர்களது உபதேசத்தின்படி விசுவாசிகளிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பரிசுத்தவான்கள்) அப்பத்தையும், திராட்சைரசத்தையும் புசித்து பானம் பண்ணுவார்கள். ஆனால் சபை மக்களுக்கு அப்பம் மாத்திரம் கொடுப்பார்கள். இது பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்கு முற்றிலும் மாறுபாடானதாகும். இவர்கள் பிஸ்கோத்து அல்லது ரொட்டி போன்ற ஏதோ ஒன்றை பிட்டுக்கொடுக்கிறார்கள். புகைப்பிடிப்பவர்களும், மதுஅருந்துபவர்களும், மற்ற கெட்ட பழக்கவழக்கங்களை உடையவர்களும் அந்த சபையின் உறுப்பினர் என்ற காரணத்தால், அங்கு வந்து கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளுகின்றனர். இது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது.

26. **இராப்போஜனம்** என்பது **கர்த்தருடைய இராப்போஜனம்** என்று அழைக்கப்படுகிறது. அநேகர் அதை காலைநேரத்தில் ஆசரிக்கின்றனர். அது கர்த்தருடைய **காலைபோஜனம்** என்று வேதத்தில் கூறப்படவில்லை. **இராப்போஜனம்** என்று அழைப்பதை அவர்கள் விட்டுவிட்டு **மதிய ஆகாரமாக்கி** மத்தியானம் ஆசரிக்கின்றனர். இது அர்த்தமற்ற ஆசரிப்பு. அவர்கள் எவ்வாறு இதை **கர்த்தருடைய இராப்போஜனம்** என்று அழைக்கமுடியுமென்று எனக்குத் தெரியவில்லை.

27. வேதத்தின் காலங்கள் தோறும் அது சர்ச்சையான விவகாரமாகவே அமைந்து வந்துள்ளது. மேஜையின் அருகில் வந்த மக்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தைத் தவறாகப் புரிந்துகொண்டனர். கொரிந்து சபையார் கர்த்தருடைய மேஜைக்கு வந்து குடித்து வெறித்தனர். பாருங்கள், அக்காலத்திலே அது தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது. எனவே பவுல் நீங்கள் சாப்பிடவேண்டுமானால் வீட்டிலே சாப்பிடுங்கள் என்கிறான்.

28. வேறொரு காரியம் - அதன் உண்மையான அர்த்தம் என்னவென்று அறியாமல், அது தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது. பாவிகள் - பாவத்தில் வாழும் மனிதர் - இராப்போஜனத்தில் பங்குகொண்டனர். மாற்றான் தாயுடன் மோசமான வாழ்க்கை நடத்திய மனிதன் ஒருவனிடம், சபையானது அவனுடைய

பாவவாழ்க்கையை உணர்த்தின பின்பும், அவன் இராப்போஜன மேஜைக்கு வந்து அதில் பங்குகொண்டான்.

29. அவர்களிடையே பிரிவினை உண்டாயிருந்தது. எனினும் அவர்கள் இராப்போஜனத்தில் பங்குகொண்டனர். பவுல் அவர்களை நோக்கி, நீங்கள் புறஜாதியாரான மற்றவரைப் போல் நடந்து கொள்ளுகிறீர்கள். உங்களுக்குள்ளே பிரிவினை காணப்படுகிறது - முக்கியமாக கேபாவின் வீட்டில் உள்ளது போல என்கிறான். நீங்கள் புறஜாதியாரான மற்றவரைப்போல் நடந்துகொள்ளுகிறீர்கள் என்றான் அவன். பாருங்கள், இராப்போஜனம் என்பது தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது.

30. இராப்போஜனம் என்பது தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட விஷயமாகவே எக்காலத்தும் இருந்து வந்துள்ளது. அதைக் குறித்து மணிக்கணக்காக பேசிக்கொண்டே இருக்கலாம். ஆனால் நாம் இராப்போஜனத்திற்கும் பாதங்கள் கழுவுதலுக்கும் இப்பொழுது வரவேண்டியவர்களாயிருக்கிறோம். அவர்கள் பாதங்கள் கழுவுதலை அறவே புறக்கணித்துவிட்டனர். பெந்தெகொஸ்தேயினர் அனேகர் அதைத் தள்ளிவைத்துவிட்டனர். ஆனால் இன்றைக்கும், அது எழுதப்பட்ட விதமாகவே வேதத்தில் காணப்படுகின்றது.

31. ரோமன் கத்தோலிக்க மார்க்கம் இதனை **இராப்போஜனம்** என்று அழைப்பதில்லை. அவர்கள் அதை **பரிசுத்த மாஸ்** (Holy Mass) என்றழைக்கின்றனர். அவர்கள் **இராப்போஜனம்** ஆசரிப்பதில்லை. பதிலாக அவர்கள் **மாஸ்** என்பதையே ஆசரிக்கின்றனர். **மாஸ்** என்பது **இராப்போஜனத்**தின் உண்மையான அர்த்தத்தைக் சீர்குலைத்துவிடுகின்றது. **மாஸ்** என்னும் சொல் **நம்பிக்கை** என்று பொருள்படும். **மாஸ்** என்பதில் பங்குகொள்வதன் மூலம் தேவன் அவர்களுடைய பாவங்களை மன்னித்துவிடுகிறார் என்று அவர்கள் நம்புகின்றனர். இந்த அப்பத்தையும் திராட்சைரசத்தையும் கத்தோலிக்க பாதிரியார் தமது ஜெபத்தினால் இயேசுவின் உண்மையான சரீரமாகவும் இரத்தமாகவும் மாற்றிவிடுகிறார் என்றும், அதில் பங்குகொள்வதினால் தேவன் அவர்களுடைய பாவங்களை மன்னித்துவிடுகிறார் என்னும் நம்பிக்கையை அவர்கள் கொண்டிருக்கின்றனர். அது ஒரு மாஸ்.

32. புராட்டெஸ்டெண்டுகள் அதை **கம்யூனியன்** (Communion) என்று ஆங்கிலத்தில் அழைக்கின்றனர். அதற்கு **நன்றி தெரிவித்தல்** என்று பொருள். கத்தோலிக்கர்கள் **மாஸ்** என்பதில் பங்குகொண்டு, அவர்களுடைய பொல்லாங்கு அனைத்தையும் தேவன் மன்னித்துவிடுவதாக நம்புகின்றனர். ஆனால் புராட்டெஸ்டெண்டுகள், தாங்கள் ஏற்கனவே தேவனுடன கொண்டுள்ள ஐக்கியத்திற்காக நன்றி தெரிவிக்கின்றனர். அவர்கள் ஏற்கனவே அவருடன் ஐக்கியம் கொண்டுள்ளனர். கத்தோலிக்கன் அது இப்பொழுதுதான் நடைபெறுவதாக எண்ணுகிறான். ஆனால் புராட்டெஸ்டெண்டோ அது ஏற்கனவே நடந்துவிட்டதாகக் கூறுகிறான். கத்தோலிக்கன் தனது பாவம் மன்னிக்கப்பட்டு விட்டதா என்று சந்தேகம் கொள்கிறான். ஆனால் புராட்டெஸ்டெண்டோ, அது ஏற்கனவே மன்னிக்கப்பட்டு விட்டதென்றும், அவன் அதினின்று விடுதலையாகிவிட்டான் என்றும் அறிக்கை செய்கிறான். **இராப்போஜனம் என்பது தேவனுடன் ஐக்கியம் கொள்ளுதலைக்குறிக்கிறது.** நாம் உட்கொள்ளும் இப்பொருட்கள், நமது பாவம் மன்னிக்கப்படும் என்ற நம்பிக்கை தெரிவிப்பதற்காக அல்ல; நமது பாவங்கள் ஏற்கனவே மன்னிக்கப்பட்டு விட்டது என்னும் விசுவாசத்தின் அடையாளமாக அது அமைந்துள்ளது. ஒன்று நம்பிக்கை, மற்றொன்று விசுவாசம். ஒருவன் தான் சரி என்று நம்புகிறான், மற்றவன் அவன் சரியென்று திட்டவட்டமாக அறிந்திருக்கின்றான். பாருங்கள், ஒருவன் தான் எந்நிலையில் இருக்கிறான் என்பதை அறியாததினால், நம்பிக்கை தெரிவிக்கிறான். மற்றொருவனோ அவன் சரி என்று திட்டவட்டமாக அறிந்திருக்கிறான். ஏனெனில் அதைக் குறித்து தேவன் என்ன கூறியுள்ளார் என்று அவனுக்குத் தெரியும். அது தான் வித்தியாசம். நீங்கள் நம்பிக்கை மாத்திரம் தெரிவிப்பவர்களாயிருந்தால், கவனமாயிருங்கள். ஆனால் நீங்கள் திட்டவட்டமாக அறிந்திருந்தால், தொடர்ந்து முன்னேறுங்கள். அப்பொழுது நீங்கள் தேவனுடன் ஐக்கியம் கொண்டவர்களாயிருப்பீர்கள். தான் மன்னிக்கப்பட்டுவிட்டதாக புராட்டெஸ்டெண்டு கூறுகிறான். அது அவனுக்குத் தெரியும். கத்தோலிக்கன் மாஸ் என்பதை ஆசரிக்கிறான்; அதனால் தான் மன்னிக்கப்படுவான் என்று நம்புகிறான். இது இவ்விதமாயுள்ளது: ஒருவன் எல்லாம் சரியாக அமையும் என்று நம்பும் பிச்சைக்காரன்; மற்றவன் ஏற்கனவே நடந்த ஒன்றிற்காக நன்றி செலுத்தும் பிச்சைக்காரன். இருவரும் பிச்சைக்காரர்களே. ஆனால் ஒருவன், கிடைக்கும் என்னும் நம்பிக்கையுடன் பிச்சையெடுக்கிறான்; மற்றவனோ அவனுக்கு கிடைத்துவிட்டது என்றறிந்து, அதை தந்தருளினதற்காக அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறான். அதுதான் வித்தியாசம். **அதுதான் உண்மையான இராப்போஜனம்.** ஆம், ஐயா ஒருவன் தான் மன்னிக்கப்படுவான் என்று நம்புகிறான்; மற்றவன் ஏற்கனவே மன்னிக்கப்பட்டுவிட்டான் என்றறிந்து, அவருக்கு துதி செலுத்துகிறான்.

33. இயேசு **நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தை பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவன் இல்லையென்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தை பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு** என்றார். யோ.6:53,54. மேலும் இயேசு தன்னைக் குறித்து **வானத்திலிருந்து இறங்கிய அப்பம் இதுவே, ஜீவ அப்பம் நானே** என்றார். யோ.6:51,48. இயேசுவின் இந்தப் போதனைகளைக் குறித்து அவருடைய சீஷர்கள் அன்று இடறினார்கள். ஆனாலும் அதைக் குறித்து அவர், அவர்களுக்கு விளக்கவில்லை. ஏனென்றால் செம்மறிஆடுகளை வெள்ளாடுகளிலிருந்து பிரித்தெடுக்கவே அப்படிச் சொன்னார். மத்.25:32.

34. இது சொற்களுக்கு நேரான அல்லது வாசகத்தின்படி நாம் இயேசுவின் மாம்சத்தைப் புசித்து, இரத்தத்தை பானம் பண்ணுவதல்ல. ஞானஸ்நானத்தைப் போன்று இவைகள் ஒரு அடையாளம். நீங்கள் ஒவ்வொருவரும் மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்.2:38. ஆனால் தண்ணீர் ஞானஸ்நானம் ஒருவனை இரட்சிக்காது. இயேசு கிறிஸ்துவின் இரத்தமே சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். இயேசு கிறிஸ்து

உங்களுடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டார், உயிர்த்தெழுந்தார் என்பதின் மேல் உள்ள விசுவாசத்தால் நீங்கள் பெறும் ஞானஸ்நானம் ஒரு நல்மனசாட்சியின் உடன்படிக்கை. 1பேது.3:21. இது ஒரு சபைஒழுங்கு. இதை நாம் நிராகரிக்க முடியாது. தண்ணீர் ஞானஸ்நானம் உங்கள் பாவங்களை மன்னிப்பதில்லை. அவ்வாறாக மன்னிக்குமானால் இயேசு கிறிஸ்து மரித்து, இரத்தம் சிந்தியது வீணாகும். தண்ணீர் ஞானஸ்நானம் நீங்கள் உங்கள் பாவத்திலிருந்து மன்னிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதைக் காண்பிப்பதற்கென தேவனுடைய நியமம், அவ்வளவுதான்.

35. இதுபோல கர்த்தருடைய இராப்போஜனத்தில் கர்த்தருடைய மாம்சத்தையும், இரத்தத்தையும் நாம் புசித்து பானம் பண்ணாமல் அதற்கு அடையாளமாக அப்பத்தையும் திராட்சைரசத்தையும் புசித்து பானம் பண்ணி, கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக பாடுபட்டு, மரணம் அடைந்ததை நினைவு கூறுகிறோம். **மரணம் அடைந்த நாளை அல்ல / இறந்த நாளை அல்ல. கிறிஸ்து மரணமடைந்த நாள் என ஒரு நாளைக் குறித்துக்கொண்டு, அந்த நாளில் கர்த்தருடைய இராப்போஜனம் ஆசரிப்பது வேதவெளிச்சம் அல்ல.** இயேசு கிறிஸ்துவின் மாம்சத்துக்கும், இரத்தத்துக்கும் அப்பமும் திராட்சை ரசமும் அடையாளமேயன்றி மற்றபடியல்ல. அப்பமும் திராட்சைரசமும் தேவன் நமக்கு நியமித்திருக்கிற கட்டளைகளை கைக்கொள்வதற்கேயல்லாமல் மற்றபடி எந்தவிதத்திலும் நம்முடன் சம்பந்தப்பட்டது இல்லை. மேலும் நாம் மத்.26:26-28 வசனங்களை வாசித்தால் இயேசு தம்முடைய சீஷர்களுடன் போஜனம் பண்ணுகையில், அப்பத்தை எடுத்து, ஆசிர்வதித்து, அதைபிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து நீங்கள் எல்லோரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது பாவமன்னிப்பு உண்டாகும்படி அனேகருக்காக சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்றார். பாருங்கள் இங்கு இயேசு தம்முடைய சரீரத்துக்கும், இரத்தத்துக்கும் அடையாளமாக அப்பத்தையும் திராட்சைரசத்தையும் கொடுத்தார்.

36. இங்கு நீங்கள் கவனிப்பீர்களானால் இயேசு அப்பத்தையும் திராட்சைரசத்தையும் சீஷர்களுக்குக் கொடுத்து, இது என்னுடைய சரீரம், இரத்தம் எனக் கூறினார். ஆனால் அவர் தமது மாம்சத்தையும், இரத்தத்தையும் கொடுக்கவில்லை. தமது மாம்சத்துக்கும் இரத்தத்துக்கும் அடையாளமாக அப்பத்தையும் திராட்சைரசத்தையும் கொடுத்தார். ஆதலால் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பரிமாறப்படும் அப்பம், அப்பம் தான். திராட்சைரசம், திராட்சைரசம் தான். அது கர்த்தருடைய மாம்சமாகவும் இரத்தமாகவும் மாறுவதில்லை. இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் ஒரே தரம் தான் பலியிடப்பட்டு சிந்தப்பட்டது. எபி.10:10. கர்த்தருடைய இராப்போஜனத்தில் பந்தி பருமாறுகிறவர் ஜெபித்தவுடன் அப்பம், ரசம் இயேசுவின் உண்மை சரீரமாகவும், இரத்தமாகவும் மாறிவிடுகிறது என்பது மகாவேசி சபையின் அண்டப்புளுகு ஆகும்.

37. சிலர் கர்த்தருடைய இராப்போஜனத்தை **இறுதி இராப்போஜனம்** - ஹ்யூரா - **CHABURAH** அல்லது **ஐக்கிய விருந்து** என அழைக்கின்றனர். அதாவது யூதரபிகள் தங்கள் சீடர்களோடு ஒன்று கூடி ஓய்வு நாளுக்காவது, ஒரு பண்டிகை நாளுக்காவது ஆயத்தமாக, வேதம் வாசித்து, அதை ஆராய்ச்சி செய்து, பின்பு அப்பத்தையும் திராட்சைரசத்தையும் மேஜையின் மேல் வைத்து அதை அனைவரும் அருந்தி உட்கொள்வது வழக்கம். இதை அவர்கள் ஒரு ஐக்கிய விருந்தாக ஆசரித்தார்கள். இந்த முறைமையின் படிதான் இயேசுவும் தம்முடைய சீஷர்களுடன் பலமுறை ஐக்கிய விருந்து ஆசரித்து வந்தார். அவ்வாறாக ஆசரித்து வந்த விருந்தில் இது கடைசியாகும் என்கிறார்கள். அவர் சரீரப்பிரகாரமாக அவருடைய சீஷர்களுடன் இல்லாத காரணத்தினாலும், அவர்களுக்குள் இருந்த ஐக்கியம் எக்காலத்திலும் நிலைத்திருக்கவேண்டி கர்த்தர் இராப்போஜன நியமத்தை ஏற்படுத்தனார் என்கிறார்கள். இது மனுஷ யூகமும், கற்பனையுமாயிருக்கிறது.

38. இரட்சணியசேனை (Salvation Army) மற்றும் சொசைட்டி ஆப் பிரண்ட்ஸ் (Society of Friends) போன்ற ஸ்தாபனங்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிப்பதில்லை. இவர்கள் கூறுவதாவது இயேசு, கர்த்தருடைய இராப்போஜனத்தை கட்டாயமான (Obligatry) நிரந்தரமான (Permanent) சடங்காக (Rite) கூறினதாக நான்கு சுவிசேஷகர்களும் கூறவில்லை. ஆதலால் நாம் ஆசரிக்க தேவையில்லை என்கிறார்கள். கர்த்தர் பாவமன்னிப்புக்கென்று தன்னுடைய ஜீவனைக் கொடுப்பதற்கு பஸ்கா விருந்து ஒரு முன் அடையாளம். மேலும் அப்.2:42,44-48,20:11 போன்ற இடங்களில் அப்பம் பிட்குதல் எனக் கூறப்பட்டுள்ளது. கர்த்தருடைய இராப்போஜனம் அல்ல, மாறாக அது யூதா:12,1கொரி.11:21,22 வசனங்களில் கூறப்பட்டுள்ள **அன்பின் விருந்து / Feast of Charity** என்கிறார்கள்.

39. இவர்கள் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்வது தான் திருவிருந்து என்கிறார்கள். It is partaking of Christ's nature or character and is necessary for the support of the spiritual life just as food and drinks are necessary for the support of the life of the body. **The spiritual feeding upon Christ is the true supper of the Lord of which all may partake.** 1கொரி.11:22-26 வசனங்களை நாம் பார்க்கும் போது அங்கு ஜனங்கள் ஓரிடத்தில் கூடிவந்து உண்மையாகவே கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொண்டார்கள். அதோடு மட்டுமல்ல நீங்கள் இந்த அப்பத்தை புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள் என்று பவுல் கூறுகிறான். கர்த்தர் வருமளவும் என்று கூறுவதால், கர்த்தருடைய வருகை வரை கர்த்தருடைய இராப்போஜனத்தை நாம் ஆசரிக்க வேண்டும் என்பதே பவுல் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்ட கட்டளையாகும். ஆதலால் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிக்கக் கூடாது என்பது சத்தியத்திற்கு விரோதமான பொய்யாகும்.

40. ஆதிக்கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை **ஸ்தோத்திரம்** என்று அழைத்தார்கள் என்ற கருத்தும் உண்டு. கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று ராத்திரியிலே அப்பத்தை எடுத்து **ஸ்தோத்திரம்** பண்ணினதினால் இந்த பேர் வழங்கிற்று. இதோடு மட்டுமல்லாது யூதர்களுடைய

ஆராதணையில் ஸ்தோத்திரம் செலுத்துதல் ஒரு இன்றியமையாத பாகமாக இருந்ததும் இதற்கு காரணம்.

41. கர்த்தருடைய இராப்போஜனம்;
அ. அப்பம் பிட்குதல் (**Breaking of Bread**) என்றும் அப்.2:42,46;20:7
ஆ. ஐக்கியம் (**Communion**) என்றும் 1கொரி.10:16 மற்றும்
இ. கர்த்தருடைய போஜன பந்தி (**The Lord's Table**) என்றும் 1கொரி.10:21 அழைக்கப்படுகிறது.

42. கர்த்தருடைய இராப்போஜனத்தை கிறிஸ்து, யூதருடைய பஸ்கா பண்டிகை ஆசரிப்பின் இறுதி கட்டத்தில் ஆரம்பித்து வைத்தார். மத்.26:17-30,மாற்.14:12-26,லூக்.22:7-20. இது கிறிஸ்து குற்றமற்ற தேவ ஆட்டுக்குட்டியாக பாவநிவாரணபலியாக தம்மை படைக்கப்போகிற தருணம். கிறிஸ்து நிலைநாட்டிய இந்த நியமம் எல்லா நாடுகளிலும், எல்லா யுகங்களிலேயும் அவரை விசுவாசிக்கிறவர்கள் ஆசரிக்க வேண்டிய ஒன்றாகும். இது அவர் நமக்காகச் செய்து முடித்த மகாபெரிய தியாக அன்பை, கிருபையை நம் மனதில் என்றும் புத்தம் புதிதாகக் காத்துக்கொள்ள உதவும் கருவியாகும்.

43. கர்த்தருடைய இராப்போஜனத்தின் முக்கியத்துவம், ஆசரிக்க வேண்டிய முறைமைகளை நாம் கீழ்கண்ட வேதவாக்கியங்களின் மூலம் அறிந்து கொள்ளலாம். 1) யோ.6:48-58 2) 1கொரி.11:17-34.

44. கர்த்தருடைய இராப்போஜனம் ஆசரிப்பதில் ஆதிசபையில் கூட ஒழுங்கின்மை காணப்பட்டது. அப்பொழுது அப்போஸ்தலனாகிய பவுல் புதிய ஏற்பாட்டின் தீர்க்கத்தரிசி என்னும் முறையில் கர்த்தரிடத்திலிருந்து நாம் எவ்வாறு கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிக்க வேண்டும் என்ற முறைமைகளை பெற்று, ஒழுங்கீனத்தை கண்டித்து, சபையில் ஒழுங்கு முறைகளை புகுத்தினான். 1கொரி.11:17-23.

45. பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் மறுஜென்ம முழுக்கினாலும் (ஞானஸ்நானம்) பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலினாலும் இரட்சிக்கப்பட்டு அப்போஸ்தலர் தீர்க்கத்தரிசிகள் உபதேசங்களில் உறுதியாய் தரித்து நின்றவர்களையே கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார். அப்.2:38, தீத்.3:5, அப்.2:42,47. இவர்கள் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொண்டவர்கள். கலா.3:27, எபே.4:24, கொலே.3:10, 2கொரி.5:17. இவர்கள் மாத்திரமே கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குபெறலாம்.

46. கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கு கொள்வதன் நோக்கம்:

அ. இயேசு கிறிஸ்து தங்களுடைய பாவங்களுக்குப் பரிகாரமாக மாம்சத்தில் பட்ட பாடுகளையும், சிலுவையில் சிந்தின இரத்தத்தையும் நினைவுகூறுவதற்கு யாத்.12:14, 1கொரி.11:24,25, லூக்.22:19,20.

ஆ. கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்க 1கொரி.11:26. கர்த்தர் வர இருக்கிறார் என்ற வாக்குதத்தத்தின் மேல் உள்ள விசுவாசத்திற்கு எடுத்துக்காட்டாக. அதாவது பின்நோக்கி கர்த்தருடைய பாடு மரணத்தை நினைவுகூர்ந்து (பாடுமரணநாளை நினைவுகூர்ந்து அல்ல), முன்நோக்கி அவருடைய வருகையை எதிர்பார்ப்பதாகும்.

இ. ஆவியின் முதற்பலன்களைப் பெற்று நம்முடைய சரீரமீட்பாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்கு காத்திருக்கிறோம் என்ற நம்பிக்கையை தெரிவிக்க. ரோ.8:23.

ஈ. சீக்கிரமாக கிறிஸ்துவோடு கூட அவருடைய பிதாவின் ராஜ்யத்திலே இவ்விதமான பந்தியிலே உட்காரப்போகிறோம் என்ற நிச்சயத்திற்கு முன் அடையாளமாக. மத்.26:29.

உ. தாங்கள் நித்தியஜீவனை உடையவர்கள் என்பதை தெரிவிக்க. யோ.6:54. கிறிஸ்து மெய்யான தேவனும் நித்தியஜீவனுமாயிருக்கிறார். 1யோ.5:20. அவரோடு ஐக்கியப்படுகிறவன் அவனுடைய ஜீவனில் பங்கு உள்ளவனாகிறான்.

ஊ. கிறிஸ்து தங்களிலும், தாங்கள் கிறிஸ்துவிலும் நிலைத்திருக்கிறதை வெளிப்படுத்த. யோ.6:56

எ. தாங்கள் கிறிஸ்துவிலும், கிறிஸ்துவினுடைய வார்த்தை தங்களிலும் நிலைத்திருக்கிறதை வெளிப்படுத்த. யோ.15:7.

ஏ. தங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவோடும் இருக்கிறதென்பதை எடுத்துக்காட்ட. 1யோ.1:3.

ஐ. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எடுத்துக்கொள்ளப்படுதலில் முதலாவது எழுந்திருப்பார்கள் என்ற வாக்குதத்தத்தின் மேல் உள்ள விசுவாசத்தை உறுதிப்படுத்த. யோ.6:54.

ஒ. பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் யாவரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு எல்லோரும் ஒரே ஆவிக்குள்ளாக தாகம் தீர்க்கப்பட்டவர்கள் என்பதை தெரிவிக்க. 1கொரி.12:13.

ஓ. இது ஒரே விசுவாசத்திலும், ஒரே நம்பிக்கையிலும் உள்ளவர்கள் தங்கள் ஐக்கியத்தைக் காட்ட எடுத்துக்கொள்ளும் போஜனம். 1கொரி.10:16.

ஔ. தாங்கள் யாவரும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி தொடரும் பரிசுத்த சகோதரர்கள் என்பதை எடுத்துக்காட்ட. பிலி.3:14, எபி.3:1.

∴ இதில் பங்குபெறுபவர்கள் ஒருவருக்காக ஒருவர் ஜீவனைக்கொடுக்க கடனாளிகளாயிருக்கிறார்கள் என்பதை தெரியப்படுத்த. 1யோ.3:16.

க. இனி இவர்கள் தங்களுக்கென்று பிழைத்திராமல் தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த. 1கொரி.5:15.

கா. இவர்கள் தங்கள் வாழ்க்கையில் துப்புரவு, உண்மை என்னும் நற்பண்புகளை கடைபிடித்து வாழ்பவர்கள் என்பதை தெரிவிக்க. 1கொரி.5:8.

கி. தாங்கள் சகோதர சிநேகத்திலே ஒருவர் மேல் ஒருவர் பட்சமாயிருக்கிறவர்கள், தங்கள் அன்பு மாயமற்ற அன்பு என்பதை தெரிவிக்க. ரோ.12:9,10.

47. **ஐக்கியம்** என்ற சொல் ஒரு வடமொழிச்சொல். இதற்கு ஒற்றுமை என்று பொருள். இதன்

ஆங்கிலேயச் சொல் கம்யூனியன் (Communion) ஆகும். இதன் கிரேக்கச் சொல் காய்னோனியா ஆகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் கர்த்தருடைய இராப்போஜன வேளையில் அவருடன் உறவாட ஐக்கியங்கொண்டு அவரை நினைவுகூறுகிறான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவையவங்களாய் உள்ளவர்கள் ஓரிடத்தில் கூடி ஒருவரோடொருவர் ஐக்கியங்கொண்டு கர்த்தரை நினைவு கூறுகிறார்கள். கர்த்தருடைய இராப்போஜனத்தில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான் என்று எழுதியிருக்கிற பிரகாரம் (அப்.10:43), தங்கள் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் (அப்.2:38), கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபையில், அதாவது தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட சபையில் (அப்.20:28), அவையவங்களாகி (அப்.2:47), ஓரிடத்தில் கூடி (1கொரி.11:20) ஒருவரோடொருவர் ஐக்கியங்கொண்டு கர்த்தர் தங்களது பாவங்களுக்காக மரித்ததை நினைவுகூறுகிறார்கள் (1கொரி.11:24,25). அதோடு மட்டுமல்ல, இவர்கள் அந்த வேளையில் கர்த்தரோடு உன்னதத்தில் உறவாடியும், அவரோடு ஐக்கியங்கொண்டும், அவர் திரும்பி வரவும் காத்திருக்கிறார்கள். 1கொரி.11:26.

48. பெந்தெகொஸ்தே நாளில் சபை உருவாக்கப்பட்டது முதல், தங்கள் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் மாத்திரமே கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கு பெற்றார்கள். இவர்கள் கிறிஸ்துவினிடத்தில் கொண்டுள்ள ஐக்கியத்துக்கும், அன்புக்கும்; இவர்கள் தங்களுக்குள் ஒருவரிலொருவர் கொண்டுள்ள ஐக்கியத்துக்கும் அன்புக்கும் அடையாளமாக, ஓரிடத்தில் ஒருமித்துக் கூடி கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கு கொண்டார்கள். 1கொரி.10:16,17. விசுவாசிகளாகிய இவர்களுக்குள் ஒரே இருதயம், ஒரே மனம் காணப்பட்டது. ஒருவனாயிலும் தனக்குள்ளானவைகள் ஒன்றாயினும் தன்னுடையது என்று சொல்லவில்லை. அப்.4:32. அதோடு மட்டுமல்ல, இவர்கள் தங்கள் மத்தியில் கொண்டுள்ள ஐக்கியம் சிதையாமல் காத்துக்கொண்டார்கள்.

49. தேவனுடைய குமாரனும் நம்முடைய இரட்சகருமான ஆட்டுக்குட்டியானவரின் சரீரத்தைப் புசிக்கவும் இரத்தத்தை பானம் பண்ணவும் ஓரிடத்தில் கூடி வந்துள்ளவர்கள் தங்களை தாங்களே சோதித்து அறிய வேண்டியவர்களாயிருக்கிறார்கள். 1கொரி.11:28.

(1) இவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய்; அன்பில் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ளுகிறதற்கு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். 2பேது.1:10, எபே.4:1-3.

(2) இவர்கள் ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருந்து, தங்களைத் தாங்களே புத்திமான்கள் என்று எண்ணாமல்,மேட்டிமையானவைகளை சிந்தியாமல், தாழ்மையைக் கடைபிடிக்க வேண்டும்.ரோ.12:16.

(3) இவர்கள் ஏக சிந்தையும், ஏக அன்பும் உடையவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மை யினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேலானவர்களாகக்கருதி, அவனவன் தனக்கானவைகளை அல்ல, பிறனுக்கானவைகளையே நோக்கி, கிறிஸ்து இயேசுவின் சிந்தையுடையவர்களாய் காணப்பட வேண்டும். பிலி.2:2-5.

(4) இவர்கள் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதரசிநேகம் உள்ளவர்களும், மனஉருக்கம் உள்ளவர்களும், இணக்கம் உள்ளவர்களுமாயிருந்து; தீமைக்கு தீமையும், உதாசீனத்துக்கு உதாசீனத்தையும் சரிக்கட்டாமல், அதற்கு பதிலாக ஆசிர்வதிக்கிறவர்களாய் காணப்படவேண்டும். 1பேது.3:8,9.

(5) இவர்கள் ஒரே காரியத்தை ஒரே மனதுடன் பேச, செயல்பட வேண்டும். இவர்கள் மத்தியில் பிரிவினை காணப்படக் கூடாது. மாறாக ஒரேயோசனையில் சீர்பொருந்தியிருக்க வேண்டும்.1கொரி.10:10-13.

(6) இவர்கள், தாங்கள் கிறிஸ்துவுக்குள் ஒன்று என்ற உணர்வுள்ளவர்களாயிருக்க வேண்டும். கலா.3:26-29, யோ.17:21.

(7) இவர்கள் அன்பு மாயமற்றதாயிருக்கவேண்டும். ரோ.12:9. இவர்கள் வசனத்தினாலும் நாவினாலும் அல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூறவேண்டும். 1யோ.3:18.

(8) இவர்கள் சகோதர சிநேகத்திலே ஒருவர் மேல் ஒருவர் பட்சமாயிருக்கவேண்டும். ரோ.12:10.

(9) இவர்கள் கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளவேண்டும். ரோ.12:10

(10) இவர்கள் நம்பிக்கையிலே சந்தோஷமாயிருக்க வேண்டும். ரோ.1212.

(11) இவர்கள் உபத்திரவத்திலே பொறுமையாயிருக்க வேண்டும். ரோ.12:12.

(12) இவர்கள் ஜெபத்திலே உறுதியாய் தரித்திருக்க வேண்டும். ரோ.12:12.

(13) இவர்கள் அந்நியரை உபசரிக்க வேண்டும். ரோ.12:13.

(14) இவர்கள் கூடுமானால் ஆனமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிக்கவேண்டும். ரோ.12:18.

(15) இவர்கள் தீமையை நன்மையினால் வெல்லுகிறவர்களாயிருக்கவேண்டும். ரோ.12:21. தீமை செய்கிறவன் தேவனைக் காணவில்லை. 3யோ:11. நன்மை செய்து பாடுபடும் போது பொறுமையோடே சகித்தால் அது தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும். 1பேது.2:20. ஆதலால் இவர்கள் கிறிஸ்தவனாய் இருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமல் இருந்து, அதன்நிமித்தம் தேவனை மகிமைப்படுத்துகிறவர்களாயிருக்க வேண்டும். 1பேது.4:16.

(16) இவர்கள் எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானதைச் செய்ய வேண்டும். ரோ.12:17. இவர்கள் தங்கள் வியாபாரம், தொழில் அனைத்திலும் உருட்டும் புரட்டும் செய்யாதபடிக்கு நியாயமான லாபமே போதுமானது என்ற திருப்தியுடன் இருக்க வேண்டும். இவர்கள் தங்களிடம் வேலை செய்கிறவர்களுக்கு ரூ.1000/- சம்பளம் கொடுத்து அதற்காக ரூ.3000/-க்கு ரசீது பெற்றுக்கொள்ளக் கூடாது. ரூ.3000/-க்கு வேலைசெய்ய ஒப்புக்கொண்டு வேலை செய்துகொண்டேயிருந்து, பின் அது தனது வாழ்க்கைக்குப் போதுமானது இல்லை எனக் கூறிக்கொண்டு மற்றொரு வேலையும் செய்து தனது கவனத்தை மற்றொரு பணியிலும் ஈடுபடுத்தக்கூடாது. வேலை செய்யும் இடத்தில் சுகவீன விடுப்பு (Sick leave) போட்டு டாக்டர் சான்றிதழ் வாங்கிக் கொடுத்துவிட்டு, வெளியூர் சென்று சுவிசேஷக்கூட்டம் நடத்தி,

அங்கு வியாதியஸ்தர்களுக்கு நான் ஜெபிக்கிறேன் எனக் கூறி ஊழியம் செய்யக் கூடாது. மாதம் ரூ.4000/- சம்பளத்தில் வேலை செய்து கொண்டு, ஊழியம் செய்கிறேன் எனக் கூறி ஒரு சிறு மந்தையை ஆதாயப்படுத்தி, அவர்களிடம் இருந்து தசமபாகம், காணிக்கை பெற்று, தன் மாத வருமானத்துடன் மேலும் ஒரு பக்கவருவாயை ஏற்படுத்திக்கொண்டு சுகபோகமான வாழ்க்கை வாழ்கிறவர்களாயிருக்கக் கூடாது.

(17) இவர்கள் பரிசுத்தவான்கள் குறைவில் அவர்களுக்கு உதவி செய்கிறவர்களாயிருக்கவேண்டும். ரோ.12:13. ஒருவன் இவ்வுலக ஆஸ்தியுள்ளவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சல் உண்டு என்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவஅன்பு நிலைகொள்வ தெப்படி? 1யோ.3:17. இவர்கள் தங்கள் திராணிக்கும், திராணிக்கு மிஞ்சியும் உதவிகள் செய்கிறவர் களாயிருக்க வேண்டும். 2கொரி.8:3. ஆனால் இந்நாட்களில், குறைவு உள்ள ஊழியக்காரனுக்கு உதவுங்கள் என்றால், இது எங்கள் ஊழியம் அல்ல; எங்கள் ஊழியம் புத்தகங்கள் மற்றும் டேப்கள் வெளியிடுவது மட்டுமே; எங்கள் ஊழியம் ஊழியக்காரனுக்கு உதவுவது அல்ல. இப்படி பல சாக்கு போக்குகள் கூறி பொருள் இருந்தும் மனம் இல்லாத நிலை. தன்னைப்போல் பிறனையும் நேசிக்க முடியாத நிலை. இவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ள தகுதியற்றவர்கள்.

(18) இவர்கள் ஐம்பது பைசா போஸ்ட் கார்டில் எழுதவேண்டிய தபாலுக்கு கம்ப்யூட்டர் பிரிண்ட் செய்து போஸ்ட் கவரில் வைத்து ரூ.9/- (உதாரணமாக) செலவுசெய்து, பின் ஊழியத்தில் பணக்கஷ்டம், பணக்கஷ்டம் எனக் கூறுகிறவர்களாயிருக்கக்கூடாது. தமிழ்நாட்டில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறவனுக்கு விசுவாசிகளின் தசமபாகம், காணிக்கைகளிலிருந்து குளிர்சாதனஅறை தேவைதானா? அனாவசியமான, வீணான, ஆடம்பர செலவுகளை தவிர்க்கிறவர்களாயிருக்க வேண்டும். பணத்தை தண்ணீரில் போடுவேன், ஆனால் ஆவிக்குரிய சகோதரனுக்கு உதவமாட்டேன் என்ற குணமுடையவர் களாயிருக்கக்கூடாது.

(19) இவர்கள் என்னிடமுள்ள பலகோடி மதிப்பு சொத்துக்கள் யாவும் என் புகழ் பாடுகிறவர்களுக்கும் என் குடும்பத்துக்குமேயன்றி இதர ஊழியங்களுக்கும், ஊழியக்காரர்களுக்கும் இல்லை என்ற மனப்பான்மை உடையவர்களாயிருக்கக்கூடாது. தன்னிடமுள்ள பலகோடி சொத்து கர்த்தருடையது என்ற சிந்தையுடையவர்களாயிருக்கவேண்டும்.

(20) இவர்கள், நாங்கள் ஒருவனுக்கும் அநியாம் செய்யவில்லை; ஒருவனையும் கெடுக்கவில்லை, ஒருவனையும் வஞ்சிக்கவில்லை என சாட்சி கூறும் நற்பண்புகளையுடையவர்களாயிருக்க வேண்டும். 2கொரி.7:2.

(21) இவர்கள் அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படமாட்டார்கள். 2கொரி.6:14. நாங்கள் ஸ்தாபனசபைகளை விட்டு வெளியே வந்துவிட்டோம் எனக் கூறுகிறார்கள். ஆனால் திருமணத்திற்கு விட்டுவந்த ஸ்தாபனசபைகளுக்கே சென்று பிணைக்கப்படுகிறார்கள். இது நாய் தான் கக்கினதைத் திரும்பத் தின்பது போன்றது. இது தான் கடைசிக்காலச் செய்தியில் இருக்கிறோம் என்பவர்களில் அதிகமானவர்களுடைய பண்பாடாயிருக்கிறது. இவர்களும் கர்த்தருடைய இராப்போ ஜனத்தில் பங்குகொள்ள தகுதியற்றவர்கள். இவர்கள் கர்த்தருடைய சரீரத்தை நிதானித் தறியாதவர்கள்.

(22) இவர்கள் தங்கள் அவையவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்த வர்களாயிருக்க வேண்டும். ரோ.6:13.

(23) இவர்கள் பாவத்துக்கு மரித்து, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக் கென்று பிழைத்திருக்கிறவர்களாயிருக்கவேண்டும். ரோ.6:11.

(24) இவர்களுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல தேவனால் உண்டாயிருக்கவேண்டும். ரோ.2:29.

(25) இவர்கள் சோர்ந்து போகாமல் நற்கிரியைகளை செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமை யையும் தேடுகிறவர்களாயிருக்கவேண்டும். ரோ.2:7.

(26) இவர்கள் ஒருவனுடைய பொன்னையாகிலும், வெள்ளியையாகிலும், வஸ்திரத்தையாகிலும் இச்சிக்கிறவர்களாயிருக்கக்கூடாது. அப்.20:33.

(27) இவர்கள் தேவனுக்கும், அவருடைய கிரிபையுள்ள வசனத்துக்கும் தங்களை ஒப்புக்கொடுத்தவர் களாயிருக்கவேண்டும். அப்.20:32.

(28) இவர்கள் தேவனுடைய ஆலோசனை ஒன்றையும் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் சபைபக்திவிருத்திக்கு அறிவிப்பவர்களாயிருக்கவேண்டும். அப்.20:26.

(29) இவர்கள் உலகத்தை கலக்குகிறவர்களாயிருக்கவேண்டும். அப்.17:6.

(30) இவர்கள் அநேக உபத்திரவங்களின் வழியாக தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க நியமிக்கப் பட்டவர்களாயிருப்பார்கள். அப்.14:22.

(31) இவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்துக்காக அவமானப்படுகிறதற்கு நியமிக்கப்பட்ட பாத்திரங்களாயிருப்பார்கள். அப்.5:41.

(32) இவர்கள் அப்போஸ்தலர், தீர்க்கத்தரிசிகள் உபதேசத்திலும், அந்நியோநியத்திலும், ஒருமனப்பட்டு ஜெபத்தில் உறுதியாய் தரித்திருப்பவர்களாயிருப்பார்கள். அப்.2:42,47. எபே.2:20.

(33) இவர்கள் வெளிநாடுகளில் உள்ள சில ஊழியங்களுக்கு இங்கு கிளை ஊழியமாக இருந்து கொண்டு அதன் மூலம் பணம் சம்பாதித்து, வஞ்சக உலகில் மாயை வாழ்க்கை நடத்துபவர்களாயி ருக்கக்கூடாது.

(34) இவர்கள் தங்கள் தொழிலில் கிடைக்கும் கள்ள மார்கெட் பணத்தை ஊழியத்தில் செலவு செய்து வெள்ளைப்பணமாக்குகிறவர்களாயிருக்கக்கூடாது.

(35) இவர்கள் ஊழியத்தின் பேரில் வெளிநாடு புள்ளிகளுடன் தொடர்பு வைத்துக்கொண்டு, உதவிகள் பெற்று, அவர்களுக்கு அடிமைகளாகயிருந்து ஒன்றும் அறியாத பாமரமக்களை ஆதாயம் செய்து, உறுதியில்லாத ஆத்துமாக்களை தந்திரமாக பிடித்து, அவர்களைக்கொண்டு தங்கள் வாழ்க்கை வசதிகளை நிறைவேற்றுகிறவர்களாயிருக்கமாட்டார்கள்.

(36) இவர்கள் அன்பில் பரிசுத்தமும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பார்கள். எபே.1:4.

(37) இவர்கள் தங்கள் வாழ்க்கையில் விசுவாசத்தோடே தைரியத்தையும், ஞானத்தையம், இச்சை அடக்கத்தையும், பொறுமையையும், தேவபக்தியையும், சகோதரசிநேகத்தையும், அன்பையும் உடையவர் களாய் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர்கிறவர்களாயிருப்பார்கள். 1பேது.2:5-7.

(38) இவர்கள் சந்தோஷப்படுகிறவர்களோடு சந்தோஷப்படுவார்கள். அழுகிறவர்களோடு அழுவார்கள்.

ரோ.12:15. அதாவது இவர்கள் தன்னைப்போல் பிறனையும் நேசிக்கும் குணமுடையவர்கள். தன் வீட்டில் தனக்கும், மனைவிக்கும், மக்களுக்கும் தனித்தனி கார் இருக்க தன் ஆவிக்குரிய சகோதரனுக்கு ஒரு சைக்கிள் வாங்க உதவி செய்ய மறுக்க மாட்டார்கள். தன் மகன்கள், மகள்கள் வெளிநாடுகளில் மாதம் பல லட்சங்கள் பணச்செலவு செய்து படிக்க, தன் ஆவிக்குரிய சகோதரன் பிள்ளைகள் உள்நாட்டில் படிக்க சில ஆயிரங்கள் கொடுக்க மனமில்லாதவர்களாயிருக்கமாட்டார்கள். தன் வீட்டில் பலநாட்டுப்பறவைகளை, நாய்களை வளர்த்து அவைகளுக்கு மாதம் பல ஆயிரங்கள் செலவு செய்யத் தகுதியிருக்கும் போது தன் ஆவிக்குரிய சகோதரனின் தேவையில் அவனுக்கு உதவ முன்வர மனதில்லாதிருக்கமாட்டார்கள்.

(39) பரிசுத்தஆவியைப் பெறாதவன் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளக் கூடாது. You must be in the Holy Spirit before you do this or you eat and drink damned to your self. (Q & A. BK.7, Page11-13) இவர்கள் ஜலத்தினாலும் பரிசுத்தஆவியினாலும் மறுபிறப்பு அடைந்த புதிய சிருஷ்டிகளாக இருக்க வேண்டும். 2கொரி.5:17.

(40) We who call our selves Christians, we have no right to take the communion unless we are living above a reproach of the world. The communion is for those who are living right as and example of Christianity. (Discerning the body of the Lord. Page5, Para1)

(41) இவர்கள் இவ்வுலகின் புகழ்ச்சின்மேல் நம்பிக்கை வைப்பதில்லை. இந்த இனிமையான சரீர அமைப்பின் மேல் நம்பிக்கை வைக்க தைரியப்படமாட்டார்கள். ஆனால் முழுமையாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தின் மேல் சார்ந்திருப்பார்கள்.

(42) தீர்க்கத்தரிசியின் செய்தியில் இருக்கிறோம் எனக்கூறிக்கொண்டு, முற்றிலுமாக செய்திகளை விசுவாசிக்காமல், தங்களுக்கு சாதகமான பகுதிகளை எடுத்துக்கொண்டு, மற்றவைகளை நிராகரிக்கும் சில ஊழியக்காரர்கள் தங்களது ஆதி ஸ்தாபன பெந்தெகொஸ்தே அனுபவத்தை விட்டுத் திரும்பாது, பிசாசு பேசும் அந்நியபாஷைகளைப் பேசிக்கொண்டு, சபை விசுவாசிகளையும் அப்படிப்பட்ட பாஷைகளில் ஊக்குவித்து சபையை பாழாக்கிக்கொண்டுவருகிறார்கள். இவர்கள் பேசுவது பரிசுத்தஆவியினுடைய அநுக்கிரகம் இல்லை. ஆதலால் இப்படி நமது சபைகளில் அந்நியபாஷை பேசும் ஊழியக்காரனுடைய கைகளினால் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளாதீர்கள். ஏனென்றால் இவனிடமுள்ள அசுத்தஆவியில் நீங்களும் பங்குகொள்கிறவர்களாகிவிடுவீர்கள். இவர்களுடைய கிரியைகள் இவர்கள் பெற்றிருக்கும் ஆவியைக்குறித்து சாட்சி கொடுக்கிறதாயிருக்கிறது.

(43) சபைஒழுங்குகளை கடைபிடிக்காது, சபைமக்களை அவரவர்கள் மனம்போன போக்கில் வழிநடக்க அனுமதிக்கும் மேய்ப்பன், ஒரு கூட்டம் ஜனங்களை ஆதாயப்படுத்தி அவர்கள் மூலமாக பணம் சம்பாதிக்கும் நோக்குடையவன். இவனைக்குறித்தும் எச்சரிக்கையாயிருந்து, இவனுடன் கர்த்தருடைய பந்தியை ஆசரிப்பதை தவிர்க்கவும். சபைஒழுங்குகளை நிலைநாட்ட முயற்சிக்கும் ஊழியக்காரர்கள் சபைக்கு வெளியே மேய்ப்பர்களால் தள்ளப்படுகிறார்கள். இப்படிப்பட்ட பாஸ்டர்கள் கூறுவது என்ன? இந்த ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த நாங்கள் என்ன பாடுபட்டோம் என்பது இவர்களுக்கு என்ன தெரியும் என்பதாகும். ஒரு பாஸ்டரையா ஆத்தும ஆதாயம் செய்ய கர்த்தர் நியமித்திருக்கிறார்? அவனை சபையை கண்காணிக்க, மந்தையை மேய்க்க அல்லவா நியமித்திருக்கிறார். ஆடுகளை மந்தையில் சேர்ப்பது அவனுடைய பணி அல்லவே! பாருங்கள், உங்கள் குழந்தைகளை ஒரு பள்ளியில் இருந்து மற்றொரு பள்ளிக்கு கொண்டு சேர்க்கிறீர்கள் என வைத்துக்கொள்வோம். அந்நிலையில் உங்கள் குழந்தை புதிதாக சேர்ந்துள்ள பள்ளியின் ஒழுங்குமுறைகளை உடனே கடைபிடித்தாக வேண்டும். இதில் சாக்குபோக்கு எதுவும் கூறமுடியாது. உலகப்பிரகாரமான காரியங்களே இப்படியிருக்கும்போது, ஆவிக்குரிய காரியங்கள் எவ்வளவு அதிக மேன்மையுள்ளதாக இருக்கவேண்டும். விசுவாசத்தில் குறைவு உள்ளவர்களை சேர்த்துக்கொள் என்று வேதம் கூறுகிறதேயன்றி சபைஒழுங்குகளை கைக்கொள் ளாதவனை சேர்த்துக்கொள் என்று அல்ல. சபைஒழுங்குகள் சபையில் கடைப்பிடிக்கப்படாவிட்டால் சபை பக்திவிருத்தி அடைய முடியாது. ஆதலால் சபைஒழுங்குகளை கடைபிடிக்கத் தவறுகிற மேய்ப்பன் ஒரு கள்ள, கபடமுள்ள வேலையாளே!

(44) மந்தையின் ஆடுகள் எலும்பும், தோலுமாக ஏழ்மையான நிலையில் இருக்க மேய்ப்பன் மட்டும் பொருளாசையினால் பணம் சம்பாதித்து, புஷ்டியுள்ளவனாக இருந்தால் அவனிடம் ஐக்கியம் கொண்டு, அவனுடன் பந்தியை ஆசரிக்கக்கூடாது. 1கொரி.5:11, எபே.5:5-7. ஏனென்றால் அவன் கொள்ளைக்காரன்.

(45) கர்த்தருக்குரிய தசமபாகத்தை ஒழுங்காகச் செலுத்தாது ஏனோதானோ என்றிருப்பவர்கள் கர்த்தரை வஞ்சிக்கிறவர்கள், திருடர்கள். ஆதலால் இவர்கள் சபிக்கப்பட்டவர்கள். மல்.3:8,9. காரியம் இப்படியிருக்க தசமபாகம் செலுத்தத் தவறுகிறவர்கள். எப்படி கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் புசித்து பானம் பண்ண முடியும்? இவர்கள் அபாத்திரர்கள். ஆதலால் இப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளக்கூடாது.

(46) ஒரு விசுவாசி, அவிசுவாசியுடன் (உதா.விசுவாசத்தில், நம்பிக்கையில், நடக்கையில்) கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ள மாட்டார்கள். ஒரு விசுவாசிக்கும், ஒரு அவிசுவாசிக்கும், ஒரு பாவனை விசுவாசிக்கும் ஐக்கியம் ஏது? வார்த்தையை விசுவாசிக்காதவனோடு, இக்காலத்திற்குரிய செய்தியை விசுவாசிக்காதவனோடு, எப்படி ஒரு செய்தியிலுள்ளவன் ஐக்கியம் கொள்ள முடியும்? ஒரு விசுவாசி, ஒரு அவிசுவாசியோடு, ஒரு பாவனை விசுவாசியோடு தன்னை கொக்கி மாட்டி சிக்கிக்கொள்ள மாட்டான். அது ஆகாப்வுடன் யோசபாத் மாட்டிக்கொண்டது போலாகும். ஓ! விசுவாசியாகிய உனக்கு ஆகாப்வுடன் சம்பந்தம் ஏது? அவனை விட்டு விலகு, அவனுடன் கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ளாதே.

(47) உலகப்பிரகாரமான ஒரு பணியில் தன் காலத்தையும், நேரத்தையும் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, ஒருவனுக்கு பணிபுரிய தன்னை முற்றிலும் அர்ப்பணித்துவிட்டு, அதே நேரத்தில் தேவனுக்கும் ஊழியம் செய்கிறேன் என்பவன் கர்த்தருடைய பந்தியை நடத்தினால் அவன் ஒரு அபாத்திரன். **மனிதனுக்கும் தேவனுக்கும் ஒரே சமயத்தில் ஊழியம் செய்ய உங்களால் கூடாது. தேவனுடைய ஊழியக்காரன் என்பவன் அவருக்கென்று பிரத்தியேகமான தன்மையுள்ளவனாய் இருக்க வேண்டும். இதை ஜனங்கள் பார்க்கக்கூடுமானால் நலமாய் இருக்கும்.** (செல்வாக்கு 15.3.1964, பத்தி 38).

(48) ஊழியத்தின் பெயரில் பணம் சம்பாதித்து தங்கள் சமுதாய நிலையை உயர்த்திக் கொள்கிறவர்கள் இந்த பந்தியில் பங்குகொள்ளத் தகுதியற்றவர்கள். ஏனென்றால் ஊழியக்காரர்கள்

ஊழியங்கொள்ளும்படிவராமல் ஊழியஞ்செய்யவே வந்துள்ளார்கள்.

(49) ஊழியத்தின் பாதையில் போட்டியும், பொறாமையும் காணப்படுமாயின் அதில் சம்பந்தப்பட்டவர்கள் கர்த்தருடைய பந்தியை ஆசரிக்க தகுதியற்றவர்கள். பிறருக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டிய Voice of God மற்றும் WBGNS ஒருவருக்கொருவர் ஊழியத்தில் போட்டிபோட்டுக்கொண்டு முட்டிக்கொள் கிறார்கள். இதென்ன? பொருளாசையினால் விளைந்த பொறாமை. இருவரும் இக்காலத்துக்குரிய செய்திகளை ஆங்கிலத்திலும், ஆங்கிலத்திலிருந்து இதர மொழிகளிலும் மொழிபெயர்த்துப் பிரசுரிக் கிறார்கள். இதற்காக பொதுமக்களிடம் நன்கொடையாக, காணிக்கையாக, தசமபாகமாக பணம் சேரிக்கிறார்கள். அனைத்தும் தீர்க்கத்தரிசியாகிய வில்லியம் மாரியன் பிரன்காம் பெயரிலே நடக்கிறது. இந்த பணம் சேகரிப்பதில் போட்டி உண்டாகிறது. ஒருவருக்கு கூடுதல், அடுத்தவருக்கு குறைவு என்ற நிலை ஏற்படுவதால் போட்டி உருவாகிறது. பணம் எல்லாத் தீமைக்கும் வேர். இப்படியாக ஆவிக்கு ரியவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்கிறவர்கள் மாம்சீகத்தில் செயல்படுவதால் செய்தி இவர்கள் மூலமாக தூஷிக்கப்படுகிறது. ஆதி முதல் இவர்களது நோக்கமே சரியில்லை. ஆனாலும் தேவன் இக்காலத்துக்குரிய செய்தி உலகம் முழுவதும் செல்ல இவர்களை பயன்படுத்தி வருகிறார், யூதாசைப் பயன்படுத்தியது போன்று.

(50) கர்த்தருக்குரிய தசமபாகத்தை, இதர ஊழியங்களுக்கெல்லாம் பகிர்ந்து கொடுக்காது, தனது தொந்தியிலே போட்டுக்கொள்ளும் எந்த ஊழியக்காரனும் கர்த்தருடைய பந்தியை நடத்த, ஆசரிக்க தகுதியற்றவன். இவன் வஞ்சகன், திருடன்.

(51) பந்தியில் பங்குகொள்கிறவர்களில் ஒருவரும் தனக்கென்று பிழைத்திருக்கிறதுமில்லை; ஒருவரும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. அவர்கள் பிழைத்திருந்தாலும் கர்த்தருக்கென்று பிழைத்திருக்கிறார்கள். மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறார்கள். ஆகையால் பிழைத்திருந்தாலும் மரித்தாலும் கர்த்தருடைய வர்களாய் இருக்கிறார்கள். ரோ.14:8.

(52) ஒரு மேய்ப்பன் கொஞ்சம் விசுவாசிகளை தனக்கென்று ஆதாயப்படுத்தி, அவர்களிடம் காணிக்கை, தசமபாகம் பெற்று, அதில் இதர ஊழியங்களுக்குரிய பங்கைக் கொடுக்காது, பிறருக்குரியதை திருடியும்; மேலும் நன்கொடை ரசீதுகள் விநியோகம் செய்து விசுவாசிகளிடம், அவிசுவாசிகளிடம், பொதுமக்களிடம் பணம் வசூலித்து தனக்கென்று வீடும், சபைக்கென்று கட்டிடமும் கட்டி அனைத்தையும் தன் உடைமையாக்கிக் கொள்கிறவன் ஒரு பகல்திருடன் ஆகும். இப்படிப்பட்டவர்கள் கைகளினால் நீங்கள் கர்த்தருடையபந்தியை ஆசரித்தால் அது உங்களுக்கு ஆசிர்வாதமாக இருக்காது. ஏனென்றால் இவர்கள் கொள்ளைக்காரர்கள். 1கொரி.5:11.

(53) ஒரு மேய்ப்பன் தன் வீட்டின் ஒரு பகுதியில் சபை நடத்திக்கொண்டு, பின் தன் வீட்டை தன் சபை விசுவாசிகள், இதர சபை விசுவாசிகள், அவிசுவாசிகள், பொதுமக்களிடம் நன்கொடையாக பணம் சேகரித்து தனது வீட்டை பெரிதுபடுத்தி அதாவது விரிவாக்கிக்கொண்டு மறைமுகமாக தனக்கு ஆஸ்திகளைச் சேர்ப்பானாகில் அவன் ஒரு நயவஞ்சகன். இவன் கைகளினாலும் கர்த்தருடையபந்தியை ஆசரிக்காதீர்கள். ஒரு சபை விசுவாசி, ஒருமுறை என்னிடம் கூறியதாவது; ஐயா, எங்கள் பாஸ்டர் தன் மகனை படிக்கவைக்க பல ஆயிரங்கள் வெளியே கடன் வாங்கினார். ஆனால் தன் வீட்டில் சபை கூடும் இடத்தை பெரிதுபடுத்த சபை விசுவாசிகளாகிய எங்களிடம் நன்கொடை கேட்கிறார். பாருங்கள், அவருடைய வஞ்சகத்தை? ஏன் அவர் தன் வீட்டை கடன்வாங்கி பெரிதுபடுத்தக் கூடாது? ஊழியத்தின் பேரில், விசுவாசிகள் கூடும் இடம் எனக்கூறி, விசுவாசிகளை ஏமாற்றி தன் வீட்டை பெரிதுபடுத்த முயற்சிக்கிறார் எனப் புலம்பினார்கள். இப்படித்தான் இந்நாட்களில் அநேக பாஸ்டர்கள் மக்களை ஏமாற்றி சொத்துசுகங்களை தங்களுக்கென்று சேர்க்கிறார்கள். இதை அறிந்தும், இப்படிப்பட்ட ஊழியக்காரர்களை விட்டு வெளியேவர இந்த விசுவாசிகளுக்கு போதுமான திராணி இல்லை. இப்படிப்பட்ட நயவஞ்சகர்களின் கரங்களினால் கர்த்தருடைய பந்தியை ஆசரிப்பதில் லாபம் எதுவுமில்லை. ஏனென்றால் இவன் ஒரு பொருளாசைக்காரன். இவனோடு அப்பம் புசிக்கக்கூடாது. அதாவது கர்த்தருடைய இராப்போஜனத்தைப் புசிக்கக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளோம். 1கொரி.5:11.

(54) எல்லாவற்றிற்கும் பிரதானமாக கர்த்தருடையவருகை இதுவரை வரவில்லை என்ற நம்பிக்கையில், அவருடைய வருகையை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறவர்களாக இருக்க வேண்டும். 1கொரி.11:26. 1963ல் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது என்பவர்களுடன் கர்த்தருடைய பந்தியை ஆசரிக்கக்கூடாது. அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் விரோதமானவர்கள்.

அந்த வாக்குத்தத்தத்தைச் செய்த இயேசுவிற்காகவும் நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம். உங்களிடத்தினின்று வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசு எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்திற்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த மகிழ்ச்சிக்குரிய நாள் வரத்தக்கதாக நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம். கர்த்தருடைய வருகை ஒருவேளை இன்றோ, நாளையோ, அல்லது அடுத்த வருடமோ இருக்கலாம். அது எப்பொழுது என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம்; வானங்களில் இருக்கப்போகின்ற ஒரு விருந்தில் நாங்கள் சந்திப்போம் என்று எங்களுக்கு வாக்குரைக்கப்பட்டிருக்கிறது. (நம்ப முடியாது, ஆனால் உண்மை! 2.6.1964, பத்தி 271,274). மாறுபட்டவர்கள் 1963ல் கர்த்தருடைய வருகை வந்து விட்டது என்கிறார்கள். ஆனால் தீர்க்கத்தரிசி 1964ல் அதற்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்கிறார்.

(55) நாம் இவ்வாறாக வேற்றுமையான உபதேசங்களைக் கொண்டுவந்த/வருகிற, ஆக்கினைத் தீர்ப்புக்கேதுவான மேய்ப்பர்களுடன் கலந்துகொண்டு கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளக்கூடாது. 2தெச.3:6,14. உங்கள் நம்பிக்கையை ஒரு மனிதன் மேல் வைக்காதீர்கள். அந்த மனிதன் தேவவார்த் தையை விடும் போது நீங்களும் அந்த மனிதனை விட்டுவிடுங்கள். அப்படிப்பட்ட மனிதனை விட்டுவிலகி தேவனில் நிலைத்திருங்கள். (செல்வாக்கு 15.3.1964, பத்தி 172). கர்த்தருடைய வருகை வரவில்லை என்று கூறுகிறவர்கள், வருகை வந்துவிட்டது என்று கூறுகிறவர்களுடன் எப்படி கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்ள முடியும்? அப்படியாக கலந்துகொள்கிறவர்கள், அவர்களுடைய மாறுபாடான உபதேசத்திற்கு மறைமுக உடன்பங்காளிகளே. ஒருவன் தன்னை பாஸ்டர் என அழைத்துக்கொண்டு ஒருநாள் கர்த்தருடைய வருகை வந்துவிட்டது எனக்கூறி, கர்த்தருடைய இராப்போஜனபந்தியை நிறுத்துவதும்; பின், கர்த்தருடைய வருகை வரவில்லை எனக்கூறி கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆரம்பிப்பானாகில் அவன் எப்படி கர்த்தரால் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரனாக இருக்க முடியும்? இப்படி அடிக்கடி உபதேசங்களில் மாறுகிறவர்களை

குறித்துக்கொண்டு அவர்களுடன் கர்த்தருடைய பந்தியை ஆசரிக்காதீர்கள். ஏனென்றால் அவர்கள் தேவ சித்தத்துக்குப் புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறவர்கள். அவர்களால் சபை பக்திவிருத்தி அடைய முடியாது.

**50. நமக்கும், இயேசு கிறிஸ்துவின் மாம்சத்துக்கும், இரத்தத்திற்கும் உள்ள ஐக்கியம் என்ன?**
**இயேசு கிறிஸ்துவின் மாம்சத்தினால்:**

அ. சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமானம் ஒழிந்தது. நியாயப்பிரமானத்துக்கு உட்பட்டவர்களும், உட்படாதவர்களும் ஒரே சரீரமாகத் தேவனுக்குள் ஒப்புரவாக்கப்பட்டோம். எபே.2:15,16.

ஆ. பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாய் இருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும், இரத்தத்தையம் உடையவராகி, மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழித்தார். ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைதனத்துக்குள்ளவராய் இருந்தவர்கள் யாவரும் விடுதலை பண்ணப்பட்டார்கள். எபி.2:14,15.

இ. நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசு தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணினார். எபி.10:19.

ஈ. நாம் அவருடைய மாம்சத்துக்கும் எலும்புக்கும் உரியவர்களாயிருக்கிறோம். இனி கிறிஸ்துவும் நாமும் ஒரே சரீரமாயிருக்கிறோம். இந்த ரகசியம் பெரியது. எபே.5:30,31.

இந்த அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறோம். நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறது. 1கொரி.10:16,17. ஆதலால் என் சகோதரரே கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறவர்கள், கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்து குற்றமற்றவர்களாக இருக்கவேண்டும்.

**இயேசு கிறிஸ்துவின் குற்றமில்லாத, மாசற்ற இரத்தத்தினால்:**

அ. பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. எபே.1:7, கொலோ.1:14, எபி.9:12, 1பேது.1:19, வெளி.5:9.

ஆ. சகல பாவங்களும் நீங்கி நாம் சுத்திகரிக்கப்பட்டோம். 1யோ.1:7, வெளி.1:6.

இ. சாத்தானை ஜெயித்தோம். வெளி.12:11.

ஈ. முன்பு தேவனுக்கு தூரமாயிருந்த நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சமீபமானோம். எபே.2:13.

உ. நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். ரோ.5:9.

ஊ. ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்ய நாம் சுத்திகரிக்கப்பட்டோம். எபி.9:14.

நாம் ஆசிர்வதிக்கிற ஆசிர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறது. இந்த இரத்தத்தோடு நாம் ஐக்கியப்பட்டிருக்கிறோம். 1கொரி.10:16.

51. கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ள வருகிற சகோதரனே, சகோதரியே உன்னிடம் மேற்கண்ட நற்பண்புகளும், குணாதிசயங்களும் காணப்படுகிறதா? உன்னை நீயே சீர்தூக்கி ஆராய்ந்து சோதித்துப்பார். இவைகள் உன்னிடம் காணப்படாவிட்டால் தயவு செய்து நீ கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளாதே. ஏனென்றால் நீ கர்த்தருடைய சரீரம் இன்னதென்று அறியாததினால் 1கொரி.11:29, கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்து குற்றமுள்ளவனாயிருப்பாய். 1கொரி.11:17. அபாத்திரமாய் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணி ஆக்கினை தீர்ப்புக்கு ஆளாகாதே. நீ உன் வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசவாசத்திலும், கற்பிலும் பிறருக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். 1தீமோ.4:12.

52. ஸ்திரீகள் தங்களுக்குள்ள வழிபாடு நாட்களில் கூட கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளலாம். இதில் தவறு எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. கர்த்தருடைய வருகை இன்னும் வரவில்லை என்ற விசுவாசத்தில் அவருடைய பாடு மரணத்தை நினைவுகூறும் இந்த ஆசரிப்புக்கும், இதற்கும் எந்தவிதமாக சம்பந்தமுமில்லை. பெண்கள் வெண்ணிற ஆடை அணிந்துவந்து கர்த்தருடைய இராப்போஜனத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்பது ஸ்தாபசபை பாரம்பரியம். வெள்ளாடைக்கும் கர்த்தருடைய இராப்போஜன பந்தியை ஆசரிப்பதற்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை. வெள்ளாடையானது உன்னை நீதிமானாக்காது, பரிசுத்தவாட்டியாக்காது. இதனால் இந்த பாரம்பரியம் தேவையில்லை. இது ஒரு பெந்தெகொஸ்தே ஸ்தாபன வெளிவேஷம், வெள்ளையடிக் கப்பட்ட கல்லறைகள்.

53. இஸ்ரவேலர் பஸ்காவை ஏழு நாட்கள் புசித்தார்கள். யாத்.12:5. ஆவிக்குரிய இஸ்ரவேல் சபையார் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏழு சபைக்காலங்களிலும், அதாவது எபேசு சபைக்காலம் தொடங்கி லவோதிக்கேயா சபைக்காலம் முடியும் வரை, அதாவது எடுத்துக்கொள்ளப்படுதல் நடக்கும்வரை, அதாவது கர்த்தருடைய வருகைவரை புசிக்கக் கட்டளை பெற்றுள்ளார்கள். 1கொரி.11:26.

54. கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிக்க வேண்டிய காலம் இரவு வேளையாகும். இராப்போஜனத்தைப் பகல்போஜனமாக்குவது இந்த ஆசரிப்பின் அர்த்தத்தைத் தாறுமாறாக்கும் அர்த்தமற்ற செயலாகும். பஸ்கா சாயங்காலத்திலே சூரியன் அஸ்தமிக்கிற போது அடிக்கப்பட்டு, இரவில் புசிக்கப்பட்டது. யாத்.12:6,8,42. உபா.16:6. மேலும் 1கொரி.11:23ல் கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று ராத்திரியிலே என்று கூறப்பட்டிருப்பதால், கர்த்தருடைய இராப்போஜனத்தை கர்த்தர் இரவு வேளையில் ஆசரித்தார் எனத் தெரிகிறது. மேலும் அப்.20:7யை வாசிக்கும் போது சீஷர்கள் அப்பம் பிட்க வாரத்தின் முதலாம் நாள் ஓரிடத்தில் இரவு வேளையில் சபையாகக் கூடினார்கள் எனத் தெரிகிறது. ஆக கர்த்தருடைய இராப்போஜனத்தை இயேசுவும், அப்போஸ்தலர்களும் இரவு வேளையில் ஆசரித்தார்கள். ஆதலால் தான் இது கர்த்தருடைய இராப்போஜனம் என அழைக்கப்படுகிறது. ஆனால் இன்று வேசிமார்க்கத்தார் இதை காலைஆகாரம், மதியஆகாரம், மாலை ஆகாரமாக்கிவிட்டார்கள். தாங்கள் நினைத்தநேரங்களில் எல்லாம் ஆசரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். கர்த்தருடைய இராப்போஜனத்தை நாம் பகல்வேளையில் ஆசரிக்கக் கூடாது. இரவு நேரங்களில் ஆசரிக்க வேண்டும். பவுல் நடுராத்திரி மட்டும் பிரசங்கித்து பின் அப்பம் பிட்டு, பின் வெகுநேரம் பேசிக்

கொண்டிருந்தான் என அப்.20:7ல் வாசிக்கிறோம். பஸ்கா சாயங்காலத்தில் அடிக்கப்பட்டு இரவில் புசிக்கப்பட்டது. நம்முடைய பஸ்கா கிறிஸ்து. அவரும் சாயங்காலத்தில் அடிக்கப்பட்டார். பஸ்காவை இரவு வேளையில் புசித்தபடியினால் அவர் மரணத்தை நினைவுகூறுதலாகிய இராப்போஜனமும் இரவுவேளையில் புசிக்கப்பட வேண்டும். இதுவே ஆரோக்கியமான உபதேசம்.

55. கர்த்தருடைய இராப்போஜனத்தை வருஷத்தில் ஒரு நாள், அது கர்த்தர் மரணமடைந்த நாள் என யூகித்துக்கொண்டு, அந்த நாளில் மட்டுமே ஆசரிக்க வேண்டும் என்பது தவறான உபதேசம். அப்.2:42, 46ல் அப்பம் பிட்குதல் என்பது சாதாரண உணவு உட்கொள்ளுதலை குறிக்கிறது என்பதும் தவறு. அப்பம் பிட்குதல், சாதாரண உணவு உட்கொள்ளுதலை குறிக்குமானால் அப்.2:42ன்படி சாதாரண உணவையா உட்கொள்வதில் அன்று சீஷர்கள் உறுதியாய் தரித்திருந்தார்கள்? அப்பம் பிட்குதல் அதாவது கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிப்பதில் உறுதியாய் தரித்திருந்தார்கள் என்பதே சரி. அடுத்து அப்.20:7ன்படி சீஷர்கள் வாரத்தின் முதலாம் நாள் சாதாரண உணவையா உட்கொள்ள கூடியிருந்தார்கள்? சாப்பாடு சாப்பிட கூடியிருந்த இடத்திலா பவுல் பிரசங்கித்தான்? இல்லையே! சீஷர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை வாரத்தின் முதலாம் நாளில் ஆசரிக்கக் கூடியிருந்த இடத்தில் பிரசங்கித்தான். சீஷர்கள் அப்பம் பிட்குதலுக்காக அதாவது கர்த்தருடைய இராப்போஜனத்துக்காக ஓரிடத்தில் கூடிவந்ததைத் தான் பவுல் 1கொரி.11:20ல் **நீங்கள் ஓரிடத்தில் கூடிவரும் போது** என்கிறான். அப்.20:16ன் ஆங்கிலம் For as often as ye eat this bread and drink this cup and ye show the Lord's death till he come என உள்ளது. அதாவது கர்த்தர் வருமளவும், இராப்போஜனத்தில் பங்குகொள்ளும் போதெல்லாம் நாம் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறோம். நாம் கர்த்தருடைய மரண நாளை நினைவுகூற/ஆசரிக்க வருடத்தில் ஒரு குறிக்கப்பட்ட நாள் மட்டுமேகூடி கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ள வேண்டும் என்பது வேதவெளிச்சம் இல்லை.

56. கர்த்தருடைய இராப்போஜன பந்தியைத் தொடக்க நாட்களில் வீடுகள் தோறும் அப்பம் பிட்டு, மகிழ்ச்சியோடும், கபடமற்ற இருதயத்தோடும் போஜனம் பண்ணினார்கள் என அப்.2:46ல் வாசிக்கிறோம். பொதுவாக அவர்கள் எங்கும் ஜெபத்துக்காகக் கூடினாலும் சரி, அல்லது வீடுகளில் கூடினாலும் சரி அல்லது ஆலயங்களில் ஆராதனைக்காகக் கூடினாலும் சரி, அவ்வாறாக ஒருமனப்பட்டு கூடின இடங்களிலெல்லாம் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரித்தார்கள். ஆனால் பின்பு அப்போஸ்தலனாகிய பவுல் இதை ஒழுங்குபடுத்தி, சீஷர்கள் அனைவரையும் ஓரிடத்தில் கூடிவரச்செய்து, அங்கு அனைவரையும் சபையாகக் கூட்டி கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிக்கச் செய்தான். 1கொரி.11:18,20,22; 14:26. ஆதலால் நாம் கர்த்தருடைய இராப்போஜனத்தை நினைத்த, கண்ட இடங்களில் ஆசரிக்கக் கூடாது. நாம் சபையாக ஓரிடத்தில் கூடிவரும் இடத்தில் மட்டுமே ஆசரிக்க வேண்டும். அது ஒருவனுடைய வீடாகவும் இருக்கலாம், பொது ஸ்தலமாகவும் இருக்கலாம்.

57. கர்த்தருடைய இராப்போஜனத்தை நாம் அனுதினமும் ஆசரிக்கலாம். சபை ஆரம்ப நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு தனி ஆலயங்கள் கிடையாது. ஆதலால் வீடுகளில் விசுவாசிகள் அனுதினமும் ஒன்றுகூடி, ஜெபம் பண்ணி, கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரித்தார்கள். அப்.2:45-47. பின்பு கிறிஸ்து உயிர்த்தெழுந்த வாரத்தின் முதல் நாளில் மாத்திரம் சபை ஓரிடத்தில் கூடி, அந்த கூட்டத்தில் ஒருவர் பிரசங்கிக்க, கூட்டம் முடிவில் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரித்தார்கள். நான்காம் நூற்றாண்டு முதல் கிறிஸ்தவர்கள் தங்களுக்கென ஆலயங்களை கட்டத் தொடங்கினார்கள். வாரத்தின் முதலாம் நாள் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிக்க பவுல் சபையை ஒழுங்குபடுத்தினான். அப்.20:7-11. ஏனென்றால்

அ. வாரத்தின் முதலாம் நாள் கிறிஸ்து உயிர்தெழுந்தார். மத்.28:1-10.
ஆ. வாரத்தின் முதலாம் நாள் பரிசுத்தஆவி ஊற்றப்பட்டது. அப்.2:1-4.
இ. வாரத்தின் முதலாம் நாள் இரட்சிப்பின் திட்டம் கொடுக்கப்பட்டது. அப்.2:38.
ஈ. வாரத்தின் முதலாம் நாள் சபை ஸ்தாபிக்கப்பட்டது. அப்.2:47.
உ. வாரத்தின் முதலாம் நாள் சபை கூடியது. 1கொரி.16:2.

இக்காரணத்தினால் வாரத்தின் முதலாம் நாள் சபை கூடுதலும், கர்த்தருடைய இராப்போஜனமும் ஆசரிக் கப்பட்டது. நாமும் அவ்வண்ணமாகவே சபையாகக் கூடி கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிப்போம்.

58. எங்களது சபை கர்தருடைய இராப்போஜனத்தை, பரிசுத்த நற்கருணை மற்றும் கம்யூனியன் மற்றும் திருவிருந்து மற்றும் மாஸ் என்று பல்வேறு பெயர்களால் அழைத்துக்கொண்டு பிரதி ஞாயிறு அல்லது மாதத்தின் முதல் ஞாயிறு, இரண்டாம் ஞாயிறு, மூன்றாம் ஞாயிறு, மாதத்தின் கடைசி ஞாயிறு அல்லது வருடத்திற்கு ஒருமுறை காலை, மதியம், மாலை வேளைகளில் ஆசரிக்கிறது என்று கூறிக்கொண்டு, அதன்படி இப்பொழுது நாங்கள் அதில் பங்குகொள்ள எங்கள் நேரம் வந்துவிட்டது என்று கூறி ஒரு பாரம்பரியத்துக்காக கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்வீர்களானால் அது தேவனுக்குத் துர்நாற்றமாயிருக்கும். இந்தத் துர்நாற்றம் தான் இன்றைய ஸ்தாபனசபைகளில் எங்கும் காணப்படுகிறது. ஏன்றால் அது வேசியின் வீடாயிற்றே!

59. விபச்சாரக்காரர்கள், வேசித்தனத்தார்கள், காமவிகாரக்காரர்கள், விக்ரகாராதணைக்காரர்கள், கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், களியாட்டக்காரர்கள், சூதாட்டக்காரர்கள், புகைபிடிப்பவர்கள், மதுஅருந்துபவர்கள், சினிமா பார்ப்பவர்கள், டி.வி. பார்ப்பவர்கள், பிறனுடைய மனைவியை இச்சிப்பவர்கள், பிறனுடைய பொருளை இச்சிப்பவர்கள், லஞ்சம் வாங்குகிறவர்கள், பிறனை ஏமாற்றி பணம் சம்பாதிப்பவர்கள், விசுவாசிகளை ஏமாற்றி பிழைப்பு நடத்தும் ஊழிக்காரர்கள் போன்ற பகல்கொள்ளைக் காரர்களாகிய கொடிதான சமுதாயத் துரோகிகள் தான் இந்நாட்களில் சபைகளில் அதிகமதிகமாக காணப்பட்டு கர்த்தருடைய இராப்போஜன பந்தியில் பங்குகொள்கிறார்கள். ஆனாலும் சபைகளில் உண்மையும், உத்தமமுமான, தேவபக்தியுள்ள, தானதர்மங்களைச் செய்யும், எப்பொழுதும் ஜெபத்திலும் விண்ணப்பத்திலும் தரித்திருக்கும் தேவனுடைய பிள்ளைகள் உண்டு. மேற்கூறிய சமுதாய துரோகிகள் ஒரு சபையின் அங்கத்தினன் என்ற முறையில் கர்த்தருடைய இராப்போஜனப்பந்தியில் பங்கு

கொள்வார்களானால் அது தேவனுக்கு முன்பாக அருவருப்பானது.

60. ஆதலால், கர்த்தருடைய இராப்போஜனப்பந்தியில் பங்குபெறுகிறவர்கள் தங்களைத் தாங்களே சோதித்து அறியவேண்டும். 1கொரி.11:27,28,31. நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ என்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரிட்சித்துப் பாருங்கள். 2கொரி.13:5. ஒருவன் தன்னைத்தானே சோதித்து அறிந்தால் தண்டனைக்கு தப்பித்துக்கொள்ள முடியும். தவறுகளைத் திருத்தி, தண்டனைக்குத் தப்பித்துக்கொள்ளாதவனை தேவன் நியாயந்தீர்த்து தண்டனைக் கொடுக்கிறார், சிட்சிக்கிறார். ஒருவன் தன் புத்திரனை சிட்சிக்கிறது போல கர்த்தர் அவனை சிட்சிக்கிறார். உபா.8:5. சிட்சிப்பதினால் அவர் அவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பது இல்லை. 1கொரி.11:32, 2சாமு.7:14,15, 1தீமோ.1:20, ரோ.8:1, 1கொரி.15:5, எபி.12:7,8. ஒருவன் தன்னைத்தான் கிறிஸ்தவன் என்று கூறிக்கொண்டு கிறிஸ்தவனாக வாழாமல் போனால் அவன் கர்த்தருடைய சரீரம் இன்னதென்று அறியவில்லை. இதின் நிமித்தம் அநேகர் பலவீனரும், வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். அநேகர் மரித்தும் விட்டார்கள்.

61. ஒரு முறை மூன்று பையன்கள் நற்கருணையை பாவனை செய்ததை நான் அறிவேன். அவர்கள் ஹோட்டல் அறைக்கு சென்று பன்றி இறைச்சி நிறைந்த சான்ட்விச்களையும், ஒரு குப்பி விஸ்கியையும் வாங்கி, பெந்தெகொஸ்தே சபையில் அவர்கள் நடத்தும் நற்கருணையை கேலிசெய்யும் வண்ணமாக, அவர்களுடைய நற்கருணையை புசித்தார்கள். மூன்று மாதத்திற்குள் ஒருவன் மரித்துப்போனான். மற்ற இருவரும் பைத்தியக்காரர் விடுதியில் சேர்க்கப்பட்டனர். நீங்கள் தேவனை அவமதிக்கக்கூடாது. நீங்கள் அவரை மதிக்க வேண்டும். உங்களுக்கு அதில் நம்பிக்கை இல்லையென்றால், பேசாமல் இருங்கள். அதைவிட்டு விலகிநில்லுங்கள், அப்படி மதிப்புக்கொடுங்கள் (மரியாதை, பத்தி 85,86).

62. இராப்போஜனத்தைக் குறித்த ஒன்று என் சிந்தையில் எழுந்தது. அன்றொரு நாள் ஒரு குறிப்பிட்ட நபர் சபைக்குச் சென்றார். அவரை சபைக்கு கொண்டுச் செல்ல ஒரு வாடகை கார் அவருக்கு அவசியமாயிருந்தது. அவர் பரம ஏழை. அவர் சென்று இராப்போஜனம் எடுத்தார். அவருடைய அண்டை வீட்டுக்காரன் ஒரு விதமான ... தேவனை அறியாத ஒருவிதமான தன்னிச்சையாக நடக்கும் மனிதன். அவன் தன் அண்டை வீட்டானிடம், வாடகை காரில் இன்று காலை எங்கு சென்றீர்கள் என்று கேட்டான். அவர்... அவருடைய மேசையின் மேல் ஆகாரம் எதுவுமே இல்லாத பரம ஏழை அவர். அவர், சபையில் இராப்போஜனம் ஆசரிக்கப்பட்டது, இராப்போஜனம் எடுக்க அங்கு நான் சென்றிருந்தேன் என்றார். இவன், இராப்போஜனம் என்றால் என்ன என்று கேட்டான். அவர், அது கர்த்தருடைய அப்பமும் திராட்சைரசமும் என்று விளக்கிக்கொடுத்தார். அவன், நானும் கூட அதை உட்கொண்டேன் ஒரு தட்டு நிறைய பிஸ்கோத்துக்களைத் தின்று, இரண்டு பைண்ட் விஸ்கி குடித்தேன் என்றான். அந்த நேரத்திலேயே அவனுக்கு உடனடியாக மாரடைப்பு ஏற்பட்டது. அவன் எந்த நேரத்திலும் மரிக்கக் கூடும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர். மார்க்கத்தைத் தூஷிக்காதீர்கள், அவபக்தியாயிராதீர்கள். பாருங்கள், கர்த்தருடைய வார்த்தைக்கு மரியாதை கொடுங்கள். பாருங்கள், ஏனெனில் நாம் எந்த நிமிடத்தில் அழைக்கப்பட்டு தேவனிடத்தில் பதில் கூறவேண்டுமென்று நமக்குத் தெரியாது. (ஒரு உண்மையான சாட்சிக்காரனின் சாட்சி, பத்தி 46-48)

63. கர்த்தருடைய இராப்போஜனத்தை அந்நியருடன் சேர்ந்து, அவிசுவாசிகளுடன் சேர்ந்து புசிக்கக்கூடாது. யாத்.12:43-45,48. ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டு, ஒரே விசுவாசத்தைக் கொண்டு, ஒரே ஆவியினால் ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, ஒரே ஆவிக்குள்ளாக தாகம் தீர்க்கப்பட்டவர்களே ஒன்றுசேர்ந்து பங்குகொள்ள வேண்டும். அவிசுவாசிகளுடனே விசுவாசிக்குப் பங்கு ஏது? நாம் அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படக்கூடாது. 2கொரி.6:14,15. ஆனால் திருமணத்தில் மட்டும் பங்குகொள்ளலாமா? அவ்வாறு பங்குகொள்ளுகிறவன் யாராக இருந்தாலும் சரி அவன் ஒரு பெரிய மாய்மாலக்காரன். இப்படிப்பட்ட மாய்மாலக்காரர்கள் கர்த்தர் லவோதிக்கேயா சபைதூதனுக்குக் கொடுக்கப்பட்ட செய்தியில் இருக்கிறோம் என்பவர்கள் மத்தியில் தான் அதிகமதிகமாயிருக்கிறார்கள். இவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

64. கர்த்தருடைய இராப்போஜன வேளையில், அப்பம் பரிமாறப்படும் சமயத்தில் நாம் ஒருவருக்காக ஒருவர் காத்திருக்க வேண்டும். அப்பம் பரிமாறப்பட்டு வரும் வேளையில், அப்பத்தை முதலில் பெற்றவர்கள் உடன் சாப்பிடக்கூடாது. அனைவருக்கும் பரிமாறப்படும்வரை காத்திருந்து, அனைவருக்கும் பரிமாறப்பட்டவுடன் ஒன்றாக ஒரே வேளையில் அனைவரும் போஜனம் பண்ணவேண்டும். 1கொரி.1120-22.

65. மேலும், கர்த்தருடைய இராப்போஜன வேளையில், நாம் போஜனம் பண்ணும் முன் ஒருவருக்காக ஒருவர் காத்திருக்க வேண்டும். எதற்காக?

அ. ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே சோதித்து அறிய

ஆ. ஒருவரில் ஒருவருக்கு மனஸ்தாபம், மனவருத்தம் இருந்தால் அவரிடம் சென்று சீர்பொருந்த

இ. ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்க

ஈ. தேவனோடு உறவாட, பேச Taking back and forth with God. நீங்கள் தேவனோடு உறவாடுகிறேன் எனக்கூறி அவருடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் போனால் அது நீங்கள் தேவனோடு உறவாடுகிறதல்ல, பிசாசினோடு உறவாடுவதாகும். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். யோ.15:7.

66. அ. மேலும் இந்த வேளையில் யாருடைய வீட்டில் பானையில் மாவும், கலசத்தில் எண்ணெயும் இல்லையோ அவர்கள் தங்கள் தேவைக்காக ஆண்டவரை நினைவுகூறலாம்.

ஆ. யாருடைய வீட்டில் பொருளாதார நெருக்கடியோ, அன்றாட தேவைகள் சந்திக்கப்படவில்லையோ நெருக்கடி தீர அவர்கள் ஆண்டவரை நினைவுகூறலாம்.

இ. யாராவது வீட்டில் வியாதிப்பட்டு, பிழைக்கவே முடியாது என்ற நிலையில் இருந்தால் சுகம்பெற

ஆண்டவரை நினைவுகூறலாம்.

ஈ. யாருடைய இல்லத்திலாவது பிசாசின் சோதனைகள், தொல்லைகள் இருந்தால் சாத்தானுடைய கட்டுகளை முறியடிக்க ஆண்டவரை நினைவுகூறலாம்.

சுருக்கமாக சொல்லப்போனால், யாருடைய வாழ்க்கையில் சந்தோஷமும், சமாதானமும் இல்லையோ, வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்கள் இந்த வேளையில் ஆண்டவரை நினைவுகூர்ந்து பரிகாரம் பெற்றுக் கொள்ளலாம்.

67. இந்த வேளையில் பரிகாரங்களுக்காக நாம் ஆண்டவரை நினைவு கூறும்போது:

அ. அவர் **யெகோவா யீரேயாக** ஒவ்வொருவருடைய தேவைகளையும் ஏற்றவேளையில் சந்திக்கிறார்.

ஆ. அவர் **யெகோவா** ரபாவாக அவர்கள் நோய்களைக் குணமாக்குகிறார்.

இ. அவர் **யெகோவா** நிசியாக அவர்களுக்கு சாத்தான் மீது வெற்றியைக் கொடுக்கிறார். அவர்கள் தங்கள் பகைஞருடைய வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்கிறார்கள்.

ஈ. அவர் **யெகோவா** ராவாக புல்லுள்ள இடங்களில் அவர்களை மேய்த்து அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் வழிநடத்திச்செல்லுகிறார். சத்தியஆவி அவர்களை சகல சத்தியத்துக்குள்ளும் வழி நடத்துகிறது. அவர்கள் பெற்ற அபிஷேகமானது எல்லாவற்றையும் குறித்து அவர்களுக்குப் போதிக்கிறது.

உ. அவர் **யெகோவா சிட்கேனுவாக** அவர்களுடைய வாழ்க்கையின் போராட்டத்தில் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார்.

ஊ. அவர் **யெகோவா ஷம்மாவாக** இருந்து அவருடைய சமூகம் அவர்களுக்கு முன் செல்கிறது. அவருடைய முகத்தின் ஒளியை இவர்கள் மீது பிரகாசிக்கச் செய்கிறார். இவர்கள் மத்தியில் இருக்கிறார். இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்கிறார்.

எ. அவர் **யெகோவா ஷாலோம்**ஆக இவர்களுடைய இல்லத்தில், வாழ்க்கைப் பயணத்தில் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கட்டளையிடுகிறார். அவர்கள் அலங்கத்துக்குள்ளே சமாதானமும், அரமணைக்குள்ளே சுகமும் காணப்படுகிறது.

68. கர்த்தருடைய இராப்போஜனத்துக்கு முன்பு முழுஇரவு ஆகாரம் பஸ்காவுக்கு ஒப்பாக சாப்பிட்டுவிட்டு, பின் வந்து இராப்போஜன பந்தியில் உட்கார வேண்டும் என்ற உபதேசம் உண்டு. இது தவறு. இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்டபோது, இயேசு தம்முடைய சீஷர்களுடன் பஸ்கா போஜனம் பண்ணி, பின்பு கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆரம்பித்தார். அது போன்று நாம் பஸ்கா போஜனத்துக்கு பதிலாக இரவு ஆகாரம் சாப்பிட்டுவிட்டு, பின்பு கர்த்தருடைய போஜனத்தில் பங்குகொள்ளவேண்டும் என்கிறார்கள். யூதர்கள் சட்டபூர்வமான யூதமுறைமையின்படி, இயேசு பஸ்கா புசித்தார். அதன்பின்பு இராப்போஜனத்தை ஆரம்பித்து வைத்தார். மத்.26:17-30, மாற்.14:12-26, லூக்.22:7-20. பஸ்காபோஜனம் வேறு. கர்த்தருடைய இராப்போஜனம் வேறு. கர்த்தருடைய நாட்களிலே அவர் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தார். பஸ்காவை ஆசரித்தார். நாம் நியாப்பிரமாணத்தின்கீழ் இல்லை. நம்முடைய பஸ்கா கிறிஸ்து. நாம் அவருடைய மரணத்தை நினைவுகூறவும் (மரண நாளை அல்ல), நாம் பாவத்தோடு யுத்தம் செய்து, அந்த யுத்தம் முடிந்து, மறுபக்கம் அடைந்ததை நினைவு கூறவே கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிக்கிறோம். பாருங்கள், பவுல் என்ன சொல்கிறான் என்று: ஒருவன் பசியாய் இருந்தால் வீட்டிலே சாப்பிடக்கடவன். 1கொரி.11:20-22,34. ஒருவன் தன் வீட்டில் முழு இரவு சாப்பாடு சாப்பிட்டுவிட்டு வந்தால், பின் அவனுக்கு கர்த்தருடைய இராப்போஜனவேளையிலே பசி ஏது? கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குபெற்ற பிறகு, அந்த இரவில் எந்தவிதமான ஆகாரம், பானம் எதுவும் உட்கொள்ளாமல், மீதமுள்ள இரவு வேளையை பயபக்தியோடு கழிப்பது நல்லது. ஆதலால் கர்த்தருடைய இராப்போஜனத்துக்கு முன்பு இரவு ஆகாரம் உட்கொண்டு வருவது நல்லது அல்லது இரவு ஆகாரம் இராப்போஜனத்துக்கு பின் எடுக்காமல் இருப்பது நல்லது.

69. அன்று யூதர்கள் அரையில் கச்சைக்கட்டிக்கொண்டு, கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டு, கைகளில் தடியைப்பிடித்துக்கொண்டு பஸ்காவை ஆசரித்தார்கள். யாத்.12:11. இது இஸ்ரவேலரின் பிரயாண ஆயத்தம். ஆனால் ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நமக்கு புதிய ஜீவனுக்குரிய மீட்பின் செய்தியை பிரசித்தப்படுத்த, எடுத்துக்கொள்ளப்படுதலுக்கான ஆயத்தம். சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ! 1கொரி.9:16. கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளுகிறவர்கள் ஒவ்வொருவர் மீதும் விழுந்த கடமை சுவிசேஷத்தை பிரஸ்தாபப்படுத்துவது ஆகும். அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவங்களாக இருப்பதால், ஒவ்வொரு அவயவத்துக்கும் ஒவ்வொரு பணியிருப்பதால், இவர்கள் சும்மாயிருக்க முடியாது. ஒவ்வொருவரும் தன்தன் பணியை உணர்ந்து செயல்பட வேண்டும். நம்முடைய சரீரத்தில் பணியில்லாத அவயவங்கள் உண்டா? இல்லையே! அதன்படியே கிறிஸ்துவின் சரீரத்திலும் பணியில்லாத அவயவங்கள் கிடையாது.

70. கர்த்தருடைய இராப்போஜன பந்தியில் பரிமாறப்படும் பொருட்களின் விபரம்:

அ. புளிப்பில்லாத அப்பம் யாத்.12:8, லூக்.22:1. புளிப்பில்லாத அப்பம், கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குபெறுகிறவர்கள் வாழ்க்கையில் இருக்கவேண்டிய துப்புரவு (Sincerity) மற்றும் உண்மை (Truth) இரண்டையும் குறிக்கிறது. 1கொரி.5:8. தன்னைத்தானே கர்த்தருக்கென்று அர்பணித்த, மரியாளைப்போன்று தன்னைவிட்டு எடுபடாத ஒரு நல்ல பங்கைத் தெரிந்துகொண்ட, தன்னைத்தானே சோதித்து அறிந்த ஒரு புத்தியுள்ள, கற்புள்ள கன்னிகை அப்பத்தைச் சுடலாம். அப்பம் மெல்லிய கோதுமை மாவினால் செய்யப்படவேண்டும். கலப்பு எதுவும் இருக்கக்கூடாது. மாவில் தண்ணீர் மட்டும் விட்டு, அதில் உப்பு, எண்ணெய் எதுவும் சேர்க்காமல் பிசைந்து, பிசைந்த மாவை வட்டமாக உருளையினால் உருட்டி, ரொட்டி சுடும் கல்லில் போட்டு, சூடுபடுத்தி, அதை ஓரிருமுறை கத்தியினால் குத்திவிட வேண்டும். அப்பொழுது அப்பம் உப்பிக்கொண்டு வராமல் தட்டையாக இருக்கும்.

ஆ. இவ்வாறாக சுடப்பட்ட அப்பம் கரடுமுரடாக இருக்கும். மேலும் சிறிது கசப்பாகவும் இருக்கும். அதோடுமட்டுமல்ல சுருக்கு விழுந்து, சிறிது உடைந்து, மடிப்புள்ளதாகக் காணப்படும். அதாவது அப்பத்தின் மேல்பகுதி மேடுபள்ளத்துடன், சொரசொரப்பாகக் காணப்படும். இது நமக்காகக்

காயப்பட்டு, நொறுக்கப்பட்ட கிறிஸ்துவின் சரீரத்தை எடுத்துக்காட்டுகிறது. இது ஒரே அப்பமாக இருக்க வேண்டும். 1கொரி.10:17, மாற்.14:22. ஒரே அப்பம், கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குபெறவருகிற யாவரும் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாக இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறது. நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவின் சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறது. 1கொரி.10:16. கர்த்தருடைய இராப்போஜனத்தில் எத்தனை பேர் பங்குகொள்கிறோம் என்பதை அறிந்து அதற்கேற்ப பெரிது/சிறிதாக ஒரே அப்பமாக சுடவேண்டும். பங்குபெறுபவர்கள் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பின் கூட்டம், கூட்டமாக பந்தியில் அமர்ந்து, ஒவ்வொரு கூட்டத்திலுள்ள நபர்களின் எண்ணிக்கைக்குத்தக்கதாக அப்பத்தைப் பிட்டு பரிமாறலாம். ஆனால் அப்பத்தில் மீதம் எதுவும் வைக்கக்கூடாது. யாத்.12:10,15. இதன் நோக்கம் என்னவென்றால், நாம் அந்தந்த சபைக்காலத்துக்குரிய செய்தியில், அதாவது கர்த்தர் தூதன் மூலமாகக் கொடுத்தச் செய்தியில் நிலைத்திருக்க வேண்டும் என்பதாகும். ஒரு சபைக்காலத்துக்குரிய செய்தியை மற்றொரு சபைக்காலத்தோடு இணைக்கக்கூடாது என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

இ. பஸ்கா பண்டிகையில் புளிப்பில்லாத அப்பத்தை யூதர்கள் ஏழு நாட்கள் புசித்தார்கள். யாத்.12:15. நாம் ஏழு சபைக்காலங்களிலும் அதாவது எபேசு சபைக்காலம் முதற்கொண்டு நாம் வாழும் கடைசி சபைக்காலமாகிய லவோதிக்கேயா சபைக்காலம் வரை, அதாவது சபை கர்த்தருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்படும் வரை புசிக்க வேண்டும். நாம் புளித்த அப்பத்தை புசிக்கக்கூடாது. அதாவது தேவனுடைய செய்தி ஏழு சபைதூதர்கள் மூலமாக அந்தந்த சபைக்காலத்துக்குக் கொடுக்கப்பட்டது. தூதர்கள் கிறிஸ்துவிடமிருந்து செய்தியை நேரடியாகப் பெற்றதால் அதில் கலப்படம் ஏதும் இருக்காது. கர்த்தருடைய மந்தையின் ஆடு கர்த்தருடைய சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது. ஏனென்றால் தூதனுடைய செய்தி கர்த்தருடைய செய்தியாகும். தூதன் அந்த சபைக்காலத்து தேவனாயிருந்து தங்களுக்கு கொடுக்கப்பட்ட வெளிச்சத்தில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்தார்கள். எபேசு சபைக்குக் கொடுக்கப்பட்ட செய்தியில் அக்காலத்தில் தேவனுடைய மந்தையிலுள்ள ஆடுகள் உண்மை யாய் இருந்தார்கள், செய்தியில் நிலைத்திருந்தார்கள். அவ்வாறாக ஒவ்வொரு சபைக்காலத்திலும். நாம் லவோதிக்கேயா சபைக்காலத்து தூதனின் மூலமாக தேவன் நமக்குக் கொடுத்த செய்தியில் நிலைத்திருக்க கடமைப் பட்டிருக்கிறோம். எபேசு சபைக்காலத்து செய்தியை இக்காலத்துச் செய்தியோடு இணைக்கக்கூடாது.

71. கர்த்தருடைய இராப்போஜன பந்தியில் சிலர் திராட்சைபழம் ரசம் (Grape Juice - இதன் எபிரேயச் சொல் TIROSH - இதற்கு Freshly pressed juice of the grapes என அர்த்தம்) பரிமாறப்பட வேண்டும் என்கின்றனர். கர்த்தருடைய இராப்போஜன வேளையில் Fruit of the vine மத்.26:29, மாற்.14:25, லூக்.22:18 பரிமாறப்பட்டது. இது திராட்சையிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட ரசமாகும். இதுவே இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திற்கு அடையாளம். திராட்சைரசம் திராட்சையின் (Vine) முதற்பலன். இதை ஒரு வருடம் வரை கூட பாதுகாத்து வைக்கலாம். அப்பம் புளிப்பில்லாதது போல ரசமும் புளிப்பில்லாததாக, அதாவது பொங்கச்செய்யாத (Unfermented), எந்தவிதமான ரசாயனமாறுதலுக்குட்படாததாக இருக்க வேண்டும். ஆசரிப்பு கூடாரத்தில் பிரவேசிக்கும்போது ஆரோனும், அவன் குமாரரும் திராட்சை ரசம் (Wine), மது (Strong drink) குடிக்கக்கூடாது. லேவி.10:9. இங்கு Wine என்ற இடத்தில் YAYIN என்ற எபிரேய வார்த்தை உள்ளது. இதற்கு Fermented grape juice என அர்த்தம். Vine திராட்சை ரச சாராயம் ஆகும். மது என்ற இடத்தில் SHEKAR என்ற வார்த்தை உள்ளது. இதற்கு Strong drink distilled from barley, honey or dates என அர்த்தம். திராட்சைக்குலையின் ரசம் ஆசிர்வாதம். ஏசா.65:8. ஆதலால் திராட்சைப்பழ ரசம் தான் உபயோகிக்க வேண்டும் என்கின்றனர்.

72. இவர்கள் கூற்றுப்படி ஒயின் (Wine) திராட்சையின் இரண்டாம்தர உற்பத்தியாகும். Wine is a secondary product produced by alteration of the principal product through a process of fermentation, as the sugar in the juice is converted into alcohol while it is decaying or decomposing. ஒயின் (Wine), சுலபமாக காடி(Vinegar)யாக மாறும். மேலும் எபே.5:18ல் And be not drunk with wine, in which is excess என்று சொல்லப்பட்டிருக்கிறது. (Wine – Fermented wine ஆகும்) தேவனின் உக்கிரான கோபத்துக்கும், நியாயத்தீர்ப்புக்கும், தண்டனைக்கும் அடையாளம். ஆதலால் கர்த்தருடைய இராப்போஜனத்தில் Wine பரிமாறக்கூடாது என்கின்றனர்.

73. ஆனால் ஆதியில் மெல்கிசேதேக் ஆபிரகாமுக்கு அப்பம் (Bread), இதன் எபிரேயச் சொல் LECHEM, இதற்கு புளிப்பில்லாத அப்பம் Unleavened bread என்று பொருள். திராட்சைரசம் Wine இதன் எபிரேயச் சொல் YAYIN, இதற்கு Fermented wine என்று பொருள்.ஆதி.14:18 கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது.

74. திராட்சைபழ ரசம் Wine, இது திராட்சை பழ சாறு (Juice) இல்லை. மாறாக பொங்கச்செய்த (Fermentated) திராட்சைப் பழ ரசம் (Wine) ஆகும். ஏன் நாம் ஒயின் உபயோகிக்க வேண்டும் என்றால்: திராட்சைப்பழ சாறு நாளாக நாளாக கெட்டுவிடும் (Spoil). புளிப்பு (Sour) ஆகிவிடும். ஆனால் ஒயின் நாளாக நாளாக வீரியம் கொடுக்கும். மேலும் கெட்டுப்போகாது. அப்படியே இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு, மறுபிறப்பு அடைந்த, பரிசுத்தஆவியின் அபிஷேகம் பெற்ற ஒருவன் நாளுக்குநாள் தன் விசுவாசஜீவியத்தில் பெலன்கொண்டு, பின்நோக்கியல்ல, முன்னோக்கி, தன் வாழ்க்கைப் பாதையில், தன் ஊழியப் பாதையில், வீரியம் கூட்டிக்கொண்டே முன்னேறிச்செல்வான். அவனது விசுவாச ஜீவியம் நாளுக்கு நாள் பெலப்பட்டுக்கொண்டே செல்லும். இராப்போஜனம் பெறுகிற ஒவ்வொரு வேளையும் ஆத்துமா ஆவிக்குரிய வல்லமை அடைந்துகொண்டே செல்கிறது.

75. சிலர் நான் பரிசுத்தஆவியைப் பெற்று அப்படி ஊழியம் செய்தேன், இப்படி ஊழியம் செய்தேன். கர்த்தர் என்னை அப்படி உபயோகப்படுத்தினார், இப்படி உபயோகப்படுத்தினார். அற்புத அடையாளங்கள் நடந்தன. விசுவாச ஜீவியத்தில், ஜெபஜீவியத்தில் அனலாக, வல்லமையாக இருந்தேன். ஆனால் இன்று சோர்வு அடைந்துவிட்டேன். பழைய வல்லமை நீங்கிவிட்டது. என் பெலன் குன்றிப்போய்விட்டது. இந்நாட்களில் கர்த்தர் என்னை உபயோகப்படுத்துவதில்லை என குறைவுபட்டுக் கொள்கின்றனர். ஆனால் உண்மையென்னவென்றால் தொடக்கத்திலிருந்தே அவர்கள் பரிசுத்தஆவியைப் பெறவில்லை. பரிசுத்த

82. கர்த்தருடைய இராப்போஜன பந்தியை நடத்தும் முறைமையாதெனில்: முதலாவது இந்தப் பந்தி நேரம் மிகவும் பயபக்தியான நேரம். பந்தியை நடத்த முன்வருபவர், முதலில் இராப்போஜனத்துக்குரிய வேதபகுதிகள், மற்றும் கால்கள் கழுவுதல் பகுதிகளை தான் வாசித்து, அதை குறித்து பந்தியில் அமர்ந்திருக்கிறவர்களுக்கு விளக்கம் கொடுக்கலாம். அதாவது இந்த இரு நியமத்துக்குரிய முக்கியதுவம் குறித்து, ஆசரிக்க இருப்பவர்களின் தகுதிகள் குறித்து, அபாத்திரமாய் ஆசரித்தால் அதன் விளைவுகள் குறித்து புத்திமதிகள் கூறவேண்டும். ஆனால் இதற்கென்று பிரத்தியேகமான ஆராதனை முறைமைகள் எதுவும் கிடையாது. பந்தி நடத்துபவர் கைகளில் ஒரு புத்தகத்தைக் கொடுத்து, அதிலுள்ள ஆராதனை முறைமைகளின்படி பந்தியை நடத்தினால் அது ஆவியின் வழிநடத்துதலை, வல்லமையை மட்டுப்படுத்துவதாகும். பந்தியை நடத்துகிறவர் தன்னை பரிசுத்த ஆவிக்கு முற்றிலும் ஒப்புக்கொடுத்து, பரிசுத்தஆவி தன்னை வழிநடத்துகிறபடி ஜெபம்பண்ண வேண்டும், செயல்பட வேண்டும். அவரைக் கட்டுப்படுத்துவது ஆவியை கட்டுப்படுத்துவதாகும். அது கூடவே கூடாது.

83. ஆவியானவரின் வழிநடத்துதலின்படி புத்திமதிகள், ஆலோசனைகள் கூறியபின்பு, பந்தி பரிமாறும்முன், சிறிது நேரம் ஒருவருக்காக ஒருவர் காத்திருக்க நேரம் ஒதுக்கி, அதாவது ஒருவருக்கொருவர் சீர்பொருந்த நேரம் ஒதுக்கி, தங்களை தாங்களே அவர்கள் சீர்தூக்கிப் பார்த்து, சோதித்தறிந்து தங்களை ஆயத்தப்படுத்த வாய்ப்பு கொடுக்கவேண்டும். இந்த நேரத்தில் தங்கள் தேவைகளுக்காகவும், பிறருடைய தேவைகளுக்காகவும் ஆண்டவரை நினைவு கூறலாம். தேவனோடு சேர்ந்துரையாடலாம்.

84. இதன்பின்பு, பந்தி நடத்துகிறவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதை ஆசிர்வதிக்க வேண்டும். பின்பு அப்பத்தை பந்தியில் உட்கார்ந்திருக்கிறவர்கள் எண்ணிக்கைக்கு தக்கதாக பிட்டுக் கொள்ள வேண்டும். பின்பு ஒவ்வொருவருக்காக அப்பத்தை பங்கிடவேண்டும். மத்.26:26 அப்பொழுது அவர் **இது உனக்காகப் பிட்கப்படுகிற கிறிஸ்துவினுடைய சரீரமாயிருக்கிறது. அவரை நினைவுகூறும்படி இதை வாங்கிப்புசி** எனக் கூறவேண்டும். அப்பத்தை அனைவருக்கும் பரிமாறும்வரை ஒருவருக்காக ஒருவர் காத்திருக்க வேண்டும். பின்பு அனைவருமாக ஒரே நேரத்தில் புசிக்க வேண்டும். பழைய ஏற்பாடு காலத்தில் ஆசாரியர்கள் தேவ சமூகத்து அப்பங்களைப் புசித்தார்கள்.லேவி.24:8-9. ஆனால் நாமோ, நம்மை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு தெரிந்துகொள்ளப்பட்ட ராஜரீகமான ஆசாரியர்களாயிருப்பதால் அப்பம் புசிக்கிறோம். 1பேது.2:9

85. கர்த்தருடைய இராப்போஜன பந்தியில் பங்குபெற்ற அனைவரும் அப்பத்தை போஜனம் பண்ணி முடித்தபிறகு, பந்தி நடத்துகிறவர் ஒயின் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, ஆசிர்வதிக்க வேண்டும். பின்பு ஒருவர் பின் ஒருவராக அந்த ஒரே பாத்திரத்தில் பானம்பண்ண கொடுக்க வேண்டும். மத்.26:27, மாற்.14:23. அனைவரும் வாயினாலே பானம்பண்ணவேண்டும். ஒருவர் அன்னாந்து பார்த்துக் கொண்டு இருக்க அவர் வாயில் ரசத்தை ஊற்றக்கூடாது. சங்கிலி தொடர் போன்று ஒருவருக்கொருவர் கைமாறிக்கொண்டே சென்று பருகவேண்டும். பந்தி நடத்துகிறவர் ஒவ்வொருவருக்காக பானம் பண்ண கொடுக்கிற போது **இந்த பாத்திரம் கிறிஸ்துவின் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாய் இருக்கிறது. இதைப் பானம்பண்ணும் போது அவரை நினைவுகூறுங்கள்** என்று கூறவேண்டும். நாம் ஒரே பாத்திரத்தில் ஒருவர் பின் ஒருவராக சங்கிலி தொடர் போன்று பருகுவது நம்மில் ஒருவர் மீது ஒருவருக்குள்ள, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டான அன்பையும், ஐக்கியத்தையும் எடுத்துக் காட்டுகிறது. 1கொரி.10:16. இப்பொழுது அவர்கள் பலர் அல்ல, அவர்கள் ஒரே சரீரம். The disciples took the wine from the cup that was passed round and shared. It was an act of fellowship that bound them together, and they all drank of it.

86. திருமண வேளையில், திருமணம் முடிந்தவுடன் மாப்பிள்ளை பெண் இருவரும் பானம்பண்ண ஒரு டம்ளரில் பால் / பானம் ஏதாவது கொடுப்பார்கள். அந்த ஒரே பாத்திரத்தில் இருவரும் பானம் பண்ண வேண்டும். அதாவது இனி அவர்கள் இருவரல்ல, ஒருவர் என்ற அன்பு, பாசம் அவர்கள் உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்க அவ்வாறு பானம்பண்ண வைக்கிறார்கள். அதே போன்று தான் இங்கும். இங்கு ஒரே பாத்திரத்தில் பானம்பண்ணும் நாம் அனைவரும் ஒரே சரீரம், ஒரே குடும்பம் என்பதாகும். நாம் ஆசிர்வதிக்கிற ஆசிர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறது. அனைவரும் ஒரே பாத்திரத்தில் பானம்பண்ணினால் பாத்திரத்தில் பல வாய் படுகிறது. இது ஆரோக்கியத்திற்கு கேடு. இதனால் பல வியாதிகள் வருகிறது. ஆதலால் ஒரே பாத்திரத்தில் அனைவரும் பானம் பண்ணக்கூடாது என்று கூறுகிறார்கள். இது ஒரு பிரிவினை சக்தி. சாத்தானின் செயல். ஐக்கிய உறவை முறிக்க தூண்டும் சக்தி. This custom will weaken the sense of fellowship among those who participate and weaken the link with the apostolic pattern with we should endeavor to follow. நம்முடைய வீட்டில் ஒரே பாத்திரத்தில் பலர் தண்ணீர் குடிக்கிறோம், சாப்பிடுகிறோம் ஏனென்றால் நாம் அனைவரும் ஒரு குடும்ப அங்கத்தினர் என்ற ஐக்கிய, பாச உணர்வு. இந்த உணர்வு தான் இங்கும் வேண்டும். ஆதலால் பங்குபெறுகிறவர் அன்னாந்து பார்க்க பரிமாறுகிறவர் ரசத்தை அவர் வாயில் ஊற்றக்கூடாது. கரண்டியில் ரசத்தை எடுத்து பருகக்கொடுக்கவும் கூடாது.

87. இங்கு எஜமான், தொழிலாளி; பணக்காரன், ஏழை; படித்தவன், படிக்காதவன்; சுயாதீனன், அடிமை; பெரியவன், சிறியவன்; ஆண், பெண்; ஊழியன், விசுவாசி; இந்தியன், அமெரிக்கன்; போன்ற ஏற்றத்தாழ்வு பாகுபாடுகள் கிடையாது. மனிதனுக்குள்ளே தன் சகோதரர் அனைவரிலும் தன்னையே உயர்வாக மதித்து, தனக்காகவே அலுவல் செய்து தனக்கு உயர்பதவியை தேடுகின்ற ஒருவித மனநிலை இருக்கின்றது. இது கசப்பின் ஆவியே. நாம் யாவரும் கிறிஸ்துவுக்குள் ஒன்று என்ற உணர்வு வேண்டும்.

88. கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ள வரமுடியாத இக்கட்டான சூழ்நிலையில், ஐக்கியத்திலுள்ள யாராவது இருப்பார்களானால் அவருடைய இடத்துக்குச் சென்று அப்பத்தையும், திராட்சை ரசத்தையும் எடுத்துச் சென்று கொடுக்கலாம். ஆனால் இது நாம் முந்தி பிட்ட அப்பத்தின் ஒரு பாகமாகவும், பரிமாறிய ரசத்தின் ஒரு பாகமாகவும் இருக்க வேண்டும்.

89. முடிவாக கர்த்தருடைய இராப்போஜனப் பந்தியை நாம் பக்தியோடும், பரிசுத்தத்தோடும் ஆசரிக்க வேண்டும். ஏனென்றால் இந்த வேளையில் நாம் நம்மை நமது பரிகாரியாகிய கிறிஸ்துவோடு இணைக்கிறோம். நான் அவரில் ஒரு பாகமாக இருக்கிறேன். உங்களில் ஒரு பாகமாக இருக்கிறேன். நான் அவரை நேசிக்கிறேன், உங்களையும் நேசிக்கிறேன் என்ற வெளிப்பாடு உங்களிடத்தில் இருக்குமானால் நீங்கள் தேவனிடத்தில் கொண்டுள்ள அன்புக்கும் நீங்கள் ஒருவரோடொருவர் கொண்டுள்ள அன்புக்கும் ஐக்கியத்திற்கும் அடையாளமாக, நீங்கள் ஒருமித்து கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளுங்கள். Communion is a revelation that I am part of Him and I'm part of you, and I love you and I love Him, and we are taking this communion together as a symbol of our love to God, and our love and fellowship to one another. மற்றவர்கள் பங்குகொள்கிறார்கள் ஆதலால் நானும் பங்குகொள்கிறேன் என்ற நோக்கத்தோடு ஒருவர் இதில் பங்குகொள்ள வேண்டாம். இதை ஒரு பாரம்பரியத்துக்காக கைக்கொண்டீர்களானால் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவீர்கள். நீ கிறிஸ்தவன் என்னும் பெயரைக் கொண்டு வாழ்கிறாய், நீ இராப்போஜனத்தில் பங்குகொண்டு, கிறிஸ்தவனாக வாழாமல் போனால், நீ கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியவில்லை. நீ வாழவேண்டிய வாழ்க்கை வாழாமல் இராப்போஜனத்தில் பங்கொள்ளாதே. நீ கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாமல் கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்வதால் மரணத்திற்கு பாத்திரவானாகிறாய். இதன் நிமித்தம் அனேகர் மரித்தும் விட்டார்கள் என வேதம் கூறுகிறது. ஆதலால் உன் மனம் போன போக்கில் வாழ்ந்துவிட்டு கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளாதே. பந்தியின் முடிவில், கால்களைக்கழுவும் நியமத்தை ஆசரித்தபின் நாம் ஸ்தோத்திரப்பாட்டு பாடி மத்.26:30, மாற்.14:26 பின்பு சபை நடத்துகிறவர் சபையை ஆசிர்வதிக்க நாம் கலைந்து செல்லலாம்.

90. கர்த்தருடைய இராப்போஜன பந்தியில் வருகிறவர்கள் யார்யார் என சோதித்தறிந்து, அவர்களைத் தடுத்துநிறுத்தும் பொறுப்பை கர்த்தர் எந்த ஒரு மனிதனிடமும் கொடுக்கவில்லை. எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். 1கொரி.11:28. அபாத்திரராய் இருக்கிறவர்கள் சிலர் பந்தியில் வந்திருப்பதினால், எவரும் அவரைவிட்டு ஒதுங்கி நிற்கக் கூடாது. பங்குகொள்ளும் ஒவ்வொருவனும் தான் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு பாகம். நான் அவரை நேசிப்பது போல, அவரிடத்தில் அன்பு கூறுகிறது போல, பந்தியில் தன்னோடு பங்குகொள்கிற அனைவரையும் நேசிக்கிறேன், அன்பு கூறுகிறேன் என்ற உணர்வு அவன் இருதயத்தின் ஆழத்திலிருந்து பிறக்க வேண்டும். ஏனென்றால் அவன் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு பாகம் போன்று மற்றவர்கள் எல்லோரும் ஒவ்வொரு பாகமாக இருக்கிறார்கள். ஆதலால் பங்கு பெறுகிறவர்கள் மனுஷருக்கும் தேவனுக்கும் முன்பாக குற்றமற்ற மனசாட்சியை கொண்டிருக்க வேண்டும். அப்.24:16, 1கொரி.11:31. கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும் இருவருக்கிடையே உபதேசத்தில், விசுவாசத்தில், நடக்கையில் மனவருத்தம் இருக்குமானால், பந்தியில் சேரக்கூடாது. முதல் பந்திக்கு வரும்முன் அதை சரிசெய்துகொள்ள வேண்டும். நம்மால் இயன்றவரை நாம் தூய்மையுடன் பந்திக்கு வரவேண்டும். நம்மில் ஒருவரிலொருவரும் தேவனிடத்தில் தூய்மையான எண்ணம் கொண்டிருந்து பிறகு கர்த்தருடைய பந்தியில் ஐக்கியம் கொள்ள வேண்டும். நாம் தேவனுக்கும், ஒருவர் மற்றொருவருக்கும் நன்றி செலுத்தும் வகையில் நம்மிடையே அப்பத்தை அவருடைய சரீரமாகவும், திராட்சைரசத்தை அவருடைய இரத்தமாகவும் புசித்து வருகிறோம். தேவனுடைய கிருபையினால் நாம் இரட்சிக்கப்பட்டோம் என்று அறிந்து ஆழமான உத்தமத்துடன் வந்து கர்த்தருடைய பந்தியில் பங்குபெற வேண்டும். இப்பொழுது நாம் ஆவிக்குரியவர்கள். நாம் வித்தியாசமானவர்களாகிவிட்டோம். இப்பொழுது நாம் முன்பு போல் வாழ்வது இல்லை. சிந்திப்பது இல்லை. பழைமைகள் யாவும் ஒழிந்தன, எல்லாம் புதிதாகிவிட்டது. அல்லேலூயா! இப்பொழுது ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப்பாடுபடும். ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூட சந்தோஷப்படும். ஏனென்றால் இவர்கள் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு தாகம் தீர்க்கப்பட்டவர்கள். 1கொரி.12:27,26,13.

91. அவபக்தியுள்ள கள்ளப்போதகர்களாகிய சிலர் கர்த்தருடைய வருகை வந்துவிட்டது. இனி இராப்போஜனம் தேவையில்லை என்று கூறி விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார்கள். இவர்கள் பொய்யர்கள். சாத்தான் நீங்கள் நித்திய ஜீவனில் பங்குகொள்ளாது உங்களை புறம்பாக்க செய்யும் சதியாகும். இவனுடைய வஞ்சகத்தில் விழுந்து விடாதீர்கள். இந்த உபதேசத்தில் நம்மத்தியில் பிரபலமான ஒருவர் புதுக்கோட்டை பாஸ்டர் ஜெயராஜ் மற்றும் அவரது கூலியாட்கள் திருநெல்வேலியிலும், கோவையிலும், ஈரோட்டிலும், மதுரையிலும் உள்ளார்கள். மேலும் சென்னை பட்டாபிராம், பாஸ்டர் எட்வர்ட், பல்லாவரம், பாஸ்டர் தங்கமணி போன்றவர்கள் இவர்களுக்கு துணை செல்கிறவர்கள். இவர்களோடு ஐக்கியங்கொள்கிறவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ள தகுதியற்றவர்கள்.

92. நீங்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளவில்லை என்றால் உங்களுக்குள்ளே ஜீவன் இல்லை. பங்குகொள்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. கர்த்தர் கடைசி நாளில் அவனை எழுப்புவார். அவன் அவரில் நிலைத்திருக்கிறான். அவரும் அவனில் நிலைத்திருக்கிறார், அவன் என்றென்றைக்கும் பிழைப்பான். யோ.6:53,54,56,58. இராப்போஜனத்தின் மூலம் பெலன் கிடைக்கிறது. ஜனங்கள் எகிப்தில் இராப்போஜனத்தில் பங்குகொண்டபின் நாற்பது ஆண்டுகளாக அவர்கள் தங்கள் பாதரட்சைகள் தேயாமலும், ஆடைகள் கிழியாமலும் வனாந்திரத்தில் நடந்து சென்றனர். 20 லட்சம் பேரில் ஒருவராவது வனாந்திரத்தில் பெலவீனமானதில்லை. கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளாமல், அதாவது மனுஷகுமாரனுடைய மாம்சத்தை புசியாமலும், இரத்தத்தை பானம் பண்ணாமலும் இருக்கிறவனுக்குள்ளே ஜீவன் இல்லை. யோ.6:53. உங்களுக்கு கேடு உண்டாக தேவனுடைய கட்டளைகளைத் தள்ளிவிடாது, உங்களை நித்தியஜீவனுக்கு பாத்திரராக காத்துக்கொள்ளுங்கள். அதே வேளையில் நீங்கள் அபாத்திரமாய் பங்குகொண்டால் கர்த்தருடைய சரீரத்தைக் குறித்து குற்றம் உள்ளவர்களாயிருப்பீர்கள். 1கொரி.11:27. அதற்காக தண்டனையை நீங்கள் அடைந்தே தீர வேண்டும்.
கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

பிப்ரவரி, 2003

கிறிஸ்துவின் அன்பில்
*சகோ.காலேப் யோசுவா*